தென்மொழி

உரிமைக் கோரிக்கையின்
குரல்வளைகளை நெரிக்காதீர் !

வன்முறை என்றே உரிமைக்கோ ரிக்கையின்
குரல்வளை களை நெரிக் காதீர் !
மென்முறை என்றே ஏமாற்றுக் கா ரரின்
எத்துக்குத் துணைபோ காதீர் !

ஆட்சிக்கு வந்த அரக்கரே ! உங்கள்
ஆவணம் கிழிபடும் ஒருநாள் !
மாட்சிமைக் குரிய மாண்புக ளே,உம்
சட்டங்கள் தீப்படும் ஒருநாள் !

மக்களை ஒடுக்கிடும் மமதையின் போக்கு
மண்ணிலே புதைபடும் ஒருநாள் !
பொக்குகள் போலவே சுட்டுப் பொசுக்கிடும்
புன்செயல் மிதிபடும் ஒருநாள் !

அதிகாரக் கொடுமையர் ஆட்சியை அகற்றிட
ஆண்களும் பெண்களும் திரள்வீர் !
மதியாத போக்கும் மக்களின் துயரும்
மாய்ந்திடும் மாய்ந்திடும் உணர்வீர் !

விலை
உருபா 1-75

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

சுவடி : 2
ஓலை :

நமக்கு வந்த மடல்கள்.

O: 1198: அன்புடையீர்: வணக்கம். இதழ்கள் விலை மாற்றப் அறிந்து மகிழ்ச்சி. 'தமிழ்ச்சிட்டு' செய்திகளிலும், அமைப்பிலும் மாற்றம் தேவை. தாங்கள் எத்தகைய நெருக்கடி நிலையில் இதழ்கள் வெளியிட்டு வருகிறீர்கள் என்பது நன்கு அறிவேன். 15 ஆண்டுகளுக்கு முன்பு கடலூர் அலுவலகத்தில் தங்களைக் கண்டு மகிழ்ந்தேன். பாவாணர் அகர முதலித் திட்டத்தில் 80/- உருபா வரை அனுப்பினேன். சராசரி மாந்தன் - வறுமைக் கோடு சூழ்நிலையிலும் தமிழ்ப்பற்றுக் காரணமாக இன்றுவரையிலும் இயலும் வரை தங்கள் பணியினை மாணவர்கள் உள்ளத்தில் எடுத்து உரைக்கிறேன்.

தமிழ்ப் பற்று இல்லாத தமிழாசிரியர்களே மிகுதியாக இருக்கின்றனர். மாணவர்களின் தமிழ்ப்பற்று இன்மைக்கும் இழிநிலைக்கும் ஆசிரியர்கள், குறிப்பாகத் தமிழாசிரியர்களும் காரணமாவர். மாணவர்களிடம் தமிழ்ச்சிட்டு படிக்கும் ஆர்வம் தொடக்க நிலையிலிருந்து மேலும் பின்னடைவு ஏற்பட்டது.

'தமிழ்ச்சிட்டு' அட்டைப்படம் திங்கள் தோறும் மாற்றப்பட வேண்டும், அல்லது படம் இல்லாமல் பாடல் மட்டும் இடம் பெறலாம். செயலும், செயல் திறனும் கட்டுரை படிப்பவர்களுக்குக் குறைவாக இருப்பது நல்லது. நீண்ட கட்டுரை படிக்கப் படுவதில்லை. சிறு பாடல்கள் இடம்பெற வேண்டும். கதைகள் விரும்பிப் படிக்கிறார்கள். தமிழ் - பிழை நீக்கி எழுதும் முறை தொடர் கட்டுரை ஒரு பக்க அளவில் இடம் பெறலாம். பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் பட்டியல் தொடர்ந்து வரவேண்டும்.

துணுக்குச் செய்திகள் கவனத்தை உண்டாக்கும். உவமைகள் - பழமொழிகள் - சான்றோர் பொன்மொழிகள் இடம் பெறலாம். 15 அகவைக்கு உட்பட்டவர்கள் விரும்பிப்படிக்கும் முறையிலும் இருப்பது நல்லது. நடைமுறையில் பெரியவர்கள்கூட புரிந்து கொள்ள முடியாத செய்திகள் இடம் பெறுகின்றன. அதனால் மாணவர்கள் ஒன்றும் புரியவில்லை என்கிறார்கள். பிறமொழிப் புலவர்களின் வரலாற்றைவிடத் தமிழ் அறிஞர்களின் வரலாற்றை வெளியிடலாம்.

நாள்தோறும் புதிய இதழ்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. ஆதரவும் கிடைக்கிறது. ஆனால் தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிலைமை கவலைக்குரிய நிலைமைதான். அதற்குத் தாங்களும் முதல் காரணம். பலரும் விரும்பிப் படிக்கின்ற அளவுக்கு வெளியிட முடியாமைதான். வசதியுள்ள, படித்தவர்கள்-வேலை

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

அன்பர்களே கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவணம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு; அமைச்சர்: கல்லை-அருட்செல்வன்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு.ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன். தென்மொழி இரா. பாலகங்காதரன் (தொலைபேசி : 847829)

சுவடி 23] உகைள சுறவம் (சன-பிப்-'87) [ஓலை 2

இனநலம்
ஏமாப்பு உடைத்து!

கழக இலக்கியங்களில், திருக்குறளில்தான் 'இன நலம்' பற்றி அதிகம் பேசப் பெறுகிறது. அதுவுமன்றிக் குடிநலம் பற்றியும் அது காக்க வேண்டிய இன்றியமையாமை பற்றியும், காக்க வேண்டிய முறை பற்றியும் கூட நிறைய எடுத்துரைக்கப் பெறுகின்றது. இதில் 'இனம்' என்பதும், 'குடி' என்பதும் தமிழினத்தையும், தமிழ்க்குடியையுமே குறிக்கின்றன என்பதைப் பலர் அறியார். உலகப் பொதுமை என்று கூறிக்

கொண்டு, திருக்குறளில் உள்ள கருத்துகள் தங்கள் இனத்துக்கோ, குலத்துக்கோ மட்டும் கூறப் பெற்ற கருத்துகள் அல்ல, எல்லா மக்களுக்கும் பொதுவாகவே கூறப்பெற்ற கருத்துகள் என்று கூறி வருகின்றவை யெல்லாம் ஒரு போலியான கருத்துரையே தவிர, உண்மையானதோ, முழுமையானதோ அல்ல.

இவ் வகையான சிந்தனை அடிப்படையில் பார்க்கும் பொழுது, பிற இலக்கியங்களில் கூறப்பெறாத இனநலம், குடிநலம் என்னும் சொற்கள், திருக்குறளில் மட்டும் மிகுதியான அளவில் ஏன் கூறப் பெற்றிருக்க வேண்டும் என்ற வினவெழும்புதலும் அதற்கு விடை காண முற்படுதலும் தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன.

இனி, வெறுமனே இனநலம், குடிநலம் என்று மட்டுமே கூறப் பெறாமல், திருவள்ளுவர் பரவலான இடங்களில் இனநலக் காப்புக்கு வழி செய்யும் வகையிலும், குடிநலம் பேணப் பெறுதல் வேண்டும் என்ற வகையிலும் பல்வேறு வகையான கருத்துகளைக் கூறுவதை மிக ஆழமாகவும் அகலமாகவும் காணலாம். இதிலிருந்தே திருக்குறள் ஓர் இனநலக் காப்பு நூல் என்பதை முதன்முதலாக நாம் தெரிந்து கூற வேண்டியதாயிற்று. இது பற்றி நாம் எழுதிக் கொண்டு வரும் திருக்குறள் மெய்ப்பொருளுரையில் மிக விரிவாகவும் விளக்கமாகவும் ஆழ்ந்த ஆராய்ச்சி அடிப்படையில் எடுத்துக் கூறியிருக்கிறோம். அவ் விரிவான நூலில் அக்கருத்துகளைக் கண்டு கொள்க.

இங்கு நாம் திருக்குறளில் இனநலமே எல்லாவற்றுக்கும் தக்க காப்பாக அமைகின்ற ஓர் உணர்வு என்னும் பொருளில் கூறப் பெற்றுள்ள மூன்று குறள் கருத்துகளின் அடிப்படையில் ஒரு கருத்தை நேரடியாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். அது காலங் கருதி இடத்தால் சுட்டியதென்று அறிக.

திருக்குறளில்,

மனநலம் நன்குடைய ராயினும், சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்(பு) உடைத்து. (456)

மனநலத்தின் ஆகும் மறுமை;மற் றஃதும்
இனநலத்தின் ஏமாப்(பு) உடைத்து. (559)

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்; இனநலம்
எல்லாப் புகழும் தரும். (457)

- என வரும் இம் மூன்று திருக்குறள்களும் 'சிற்றினஞ்சேராமை' என்னும் அதிகாரத்தில் வருபவை. இக்குறள்களுக்கு, இவ்வதிகாரந் தழுவி இன்று வரை சொல்லப் பெற்று வரும் பொருள்கள் வேறு வேறானவை. அந்நிலை இவ்வதிகாரத்தின் பொருளையே தவறாகக் கொண்டதனால் வந்ததாகும். அந்த அதிகாரத்தைப் பற்றிய உண்மையான பொருளையும், அப் பொருள் கொள்ள வேண்டுவதற்கான அடிப்படை நயன்மை பற்றியும், அது தவிர

வேறு பொருள்கள் பொருந்தாமற்போவன பற்றியும் இங்குக் கூறுவது தேவையன்று. நாம் இக் குறள்களில் கூறப் பெறும் கருத்துகளையே இப்பொழுது கவனிக்க வேண்டும்.

இக் குறள்களின் ஒட்டு மொத்தப் பொழிப்பாகக் கொள்ள வேண்டிய பொருள் இது : "மாந்த உயிர்களுக்கு எல்லாவகை அறிவு நலம், பொருள் நலம், வினை நலம், பண்பு நலம் முதலிய யாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது அவர்களின் மனத்தினது நலமே ஆகும். அதுவே, மக்களுக்கு ஆக்கத்தையும் பயனையும், மறுமையையும் உண்டாக்கித் தரும் திறப்பாடு கொண்டதாகும். இது மக்களினத்தில் உயர்ந்தோராகக் கருதப் பெறுபவர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் அதைவிட, அவர்களுக்கும், அவர்களை உயர்ந்தோராக, நல்ல பண்பு நலம் பெற்றவர்களாகக் கருதுவதற்கு அடிப்படையாக உள்ள, முற் கூறப் பெற்ற பண்பு நலன்களுக்கும் முகாமையாக உள்ளது இன நலமே ஆகும். எனவே, ஓர் இனம் தன் பண்பாடுகளையும், பிற நாகரிகக் கூறுகளையும், மற்றும் பிற ஆக்கங்களையும் காத்துக் கொள்ள விரும்பினால், அதற்கு முற்றிலும் காப்பாக உள்ள இன நலத்தையே முதற்கண் காத்துக் கொள்ள வேண்டும். அவ் வினநலத்தை அது காத்துக் கொள்ளாமல் அதில் நெகிழ்ச்சியோ, தளர்ச்சியோ, புறக்கணிப்போ காட்டுமானால், அஃது ஏற்கனவே காத்துக் கொண்டுள்ளனவும், இனிமேலும் காத்துக் கொள்ள விரும்புகின்றனவுமாகிய அப் பண்பு நலன்களுக்குக் காப்பில்லாமல் போகும்" என்பதே ஆகும். (அருள் கனிந்து இப் பொழிவுக் கருத்தை மீண்டும் மீண்டும் படித்து நன்கு விளங்கிக் கொள்ளவும்.)

இக்கருத்து முதன் முதலாகவும், எச்சரிக்கையாகவும், இன நலக் கவலையோடும் திருவள்ளுவரால்தான் முதன்முதலாகக் கூறப் பெற்றது என்பதை நாம் உறுதியாகக் கொண்டால், அவர்தான் நமக்கு மூல முதல் இனநலத் தலைவரும், இனநலக் காப்பாளரும் ஆகிறார் என்பதையும் நாம் ஒப்புக் கொண்டாகல் வேண்டும். ஒப்புக் கொள்ளவே, இக் கருத்து நம் பிற ஆத்திரேலிய இனத்துக்கோ, சீன இனத்துக்கோ, ஐரோப்பிய இனத்துக்கோ சொல்லப் பெறாமல், நம் தமிழினம் ஒன்றுக்கே மிகவும் முகாமையாகக் கூறப் பெற்றதாகக் கருத்தில் கொள்ளல் வேண்டும். அத்துடன் திருவள்ளுவர் அதை ஏன் அவ்வளவு வலியுறுத்திக் கூறுகிறார் என்பதையும் நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

அவ்வாறு பார்த்தோமானால், இக்கால் வேற்று இனத்தவரால், இந்தியாவிலும் தமிழீழத்திலும் நேர்கின்ற இன நலத்தின் அழிவுகளையும் அவ் வழிவுகளினால் ஏற்படவிருக்கும் விளைவுகளையும் நாம் ஒருவாறு விளங்கிக் கொள்ள முடியும். அப்படி அதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்வோமானால், நாம் இப்பொழுதைய நிலையில் நம் இனத்திற்கே மிகச் சிறப்பாய் அமைந்துள்ள

வாகக் கருதும், பண்பியல் கூறுகளான, இலக்கியம், இலக்கணம், கலைகள், பண்பாடுகள், நாகரிகங்கள் முதலியவற்றைப் பற்றியும், மற்றும் அரசியல், பொருளியல், அறவியல், அறிவியல், வாழ்வியல் கூறுகளைப் பற்றியும் நாம் கவலைப் படாமல், அவற்றையும் நம்மையும் படிப்படியாக அழிக்கவரும் புறநிலைத் தாக்கங்களுக்கு அடிப்படையாக உள்ள இனநலக் காப்பற்ற தன்மையை நன்கு உணர முடியும். அவ்வுணர்வினால் நாம் என்ன முடிவுக்கு வரவேண்டியவர்களாக ஆவோம் எனில், இனத்திற்குப் பின்னர்தாம் பிற அனைத்தும் என்பதையும் இனம் இருந்தால் தான் நமக்குள்ள பிற அனைத்தும் இருக்கும் என்பதையும், அவ்வாறல்லாமல் இனநலத்தை நாம் சிதறவிடுவோமாயின், நாம் நம் இனத்திற்கென்று சிறப்பியல்களாகத் தேடி வைத்துக் கொண்ட பிற அனைத்தும் அழிந்து போகும்-காக்க வியலாமல் போகும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். கொள்ளவே நாம் நம் இனமழியாமல் காக்க என்ன செய்ய வேண்டும் என்பதையும் நாம் விளங்கிக் கொண்டவர்கவாக ஆவோம்.

இறுதியாக நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டும். நாம் நமக்குள்ள பிற அனைத்துச் சிறப்பியல்களையும், அவற்றின் பழமை, முதுமை, தனிமை, இனிமைப் பெருமைகளையும் பேசிக் கொண்டிருந்தால் போதாது. அவற்றை அழியாமல் காக்கவும், அவற்றைத் தொடர்ந்து நம் இனத்துக்கு வலிவான உடைமைகளாக நாம் நிலைப்படுத்தவும் எண்ணினால், விரும்பினால், முதலில் நம்மிடையில் உள்ள வேறுபாடுகளை உடனடியாகப் புறந்தள்ளி விட்டுக் களைந்துவிட்டு, நாம் நம் தமிழினத்தின் நலனை-வலிவை-ஒற்றுமையை-ஒருமுக உணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இனவலிவுதான் பொருளியல் உள்பட நம்மிடமுள்ள அனைத்தையும் காக்க முடியும் என்று உறுதியாக நம்புங்கள். நம்பாதவர்கள் ஈழத்தில் இப்பொழுது நடக்கும் கொடுமையையும், இனி, எதிர்காலத்தில் இத் தமிழ்நாட்டுத் தமிழர்க்கும் நடக்கப் போகும் சிதைவையும் ஆழமாக எண்ணிப் பார்த்துத் தங்களைத் தெளிவித்துக் கொண்டு செயலில் இறங்குவதே நம் கடமையும், கட்டளையும் ஆகும் என்பதை உறுதியாகவும் இறுதியாகவும் எண்ணிக் கடைப் பிடிக்க வேண்டிக் கொள்கிறோம்.

"தென்மொழி"

சென்னை-5

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 20.00
அரையாண்டுக் கட்டணம்	:	,, 10.00
தனியிதழ்	:	,, 1.75

ஓரிதழுக்கு உருபா 3.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

வெளிநாட்டில் உள்ள ஒரு மகள் தன் பெற்றோர்க்கு எழுதிய ஒரு மடல்!

(ஆசிரியர் குறிப்பு : என் மகள் திருவாட்டி சித்திரச் செந்தாழை ஆறிறைவன 'தென்மொழி' வாசகர்களுக்கு அறிமுகமானவள். அவள் கடந்த ஆண்டு தன் கணவருடனும் குழந்தையுடனும், கணவர் பணி நிமித்தம் சுவிட்சர்லாந்து சென்று வாழ்ந்து வருகிறாள். அவள் அடிக்கடி எங்களுக்கு எழுதும் மடல்கள் சுவையானவை. கருத்துள்ளவை. அவற்றை அனைவரும் படிக்கலாம். அவை தனிப்பட்ட செய்திகள் உள்ள மடல்களாக மட்டும் இல்லாமல், பொதுச் செய்திகளும் தாங்கி வரும். அவற்றுள் சில பொதுவான மடல்களைத் தென்மொழி வாசகர்களுக்கும் முன்வைக்க விரும்புகிறோம். அன்பர்கள் அவற்றைப் படித்துச் சுவைப்பதுடன், அவற்றில் கூறப் பெறும் செய்திகளையும், அவை சொல்லப் பெறும் முறைகளையும் கவனிப்பார்களாக. அவை படிப்பவர்க்குப் பயன் தருவன. - ஆசிரியர்.)

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய அம்மா, அப்பா, அக்கா, அண்ணன், தம்பி, தங்கைகள் ஆகிய அனைவர்க்கும், மற்றும் குழந்தைகளுக்கும் செந்து எழுதும் அன்பு மடல். நாங்கள் நலமாக உள்ளோம். நீங்கள் அனைவரும் நலமுடனிருக்க இறையருள் துணைநிற்கும். அம்மா மடல் 21-ஆம் நாள் வந்து சேர்ந்தது. மகிழ்ந்தோம். அம்மாவின் கையெழுத்து முன்பு போலத் தெளிவாக இருப்பதே அவர்களின் உடல்நல முன்னேற்றத்தைக் காட்டுகிறது. மாநாடு (தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு) சிறப்புடன் ஒருவாறு நடந்து முடிந்த செய்தியை அறிந்தோம். மாநாடு அங்கு நடந்த அந்நாள் விடியலில் நாங்கள் எல்லோரும் முன்கூட்டியே எழுந்திருந்து விரைவுடன் இயங்கும் நிகழ்ச்சியை (அதே நேரம்) இங்கு நான் படுக்கைக்குச் செல்லுமுன் (1 மணி) எண்ணிக் கொண்டே படுத்தேன். அன்றே, வீட்டில் நான் தனியாக இருக்கும்போது, இந்நேரம் அங்கு வீடு காலியாக வெறிச்சோடியிருக்கும் என்று நீண்ட நேரம் அசைபோட்டுவிட்டு, பின்பு அங்கே தொலைபேசி செய்து என் ஆறுதலுக்காக அந்த வீட்டில் ஒலித்த தொலைபேசி மணியின் ஒலியை மட்டும் கேட்டேன். அந்த 'ஒலி' என்னிடம் நிறைய செய்திகளைக் கூறியதுபோல் உணர்ந்தேன். எப்படியோ அவ்வீட்டுக் காற்று கொஞ்சநேரம் இங்கு வந்தது நிறைவாயிருந்தது. தேன் மாநாட்டில் பாடியதும் அதை நீங்கள் கேட்டதுமான 'உணர்'வை, நான் இங்கு படித்து 'உணர்ந்தேன். என் செய்வது? தென்மொழி, தமிழ்ச்சிட்டு வந்தன. புதிய ஆசிரியர்களுடன் வந்த அவற்றைப் புதிய உணர்வுடன் படித்தோம். இறைமாமா, அவர் எழுதிய நூல் ஒன்றினை 'தமிழன் அன்றும் இன்றும்' அனுப்பியிருந்தார். படித்தேன். நன்றாக இருந்தது. மடல் போட வேண்டும்.

நான் பொழிலனுக்கு எழுதிய 2-ஆம் மடல் இன்னும் அவன் கைக்குக் கிடைக்கவில்லையா? வருத்தமாக இருந்தது. அண்ணன் சென்னை வந்து விட்டதால்தான், அண்ணன் முகவரிக்குப் போட வில்லை. நான் அம்மடலை முற்றிலும் ஆங்கிலத்தில் எழுதியிருந்தேன். அவனுக்கென்று எழுதியதால், ஓரளவு சுற்றியிருப்பவர்க்குச் சட்டென்று விளங்காதிருக்கத்தான் அவ்வாறு எழுதினேன். அஃது ஒரு பொது மடல்தான்! இருப்பினும் அங்ஙனம் மறைவாக்கப்பட்டது ஏன் எனத் தெரியவில்லை. யாரையுமே குற்றம் காட்டாது தெளிவான முறையில் அவரின் மேற்பார்வையிலேயே அனுப்பியிருந்தேன். எதுவானாலும் சரி!

அப்பா அச்சகத்திற்குப் போவதும் வருவதும், எழுதுவதுமான நிறைய பணிகள்! எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டே இங்கு நானிருப்பதுதான் கடினமாக இருக்கிறது. எப்போது தான் நம் வீட்டிற்குப் பக்கமே நாங்கள் குடிவரப் போகிறோமோ அப்போதுதான் என் எண்ணம் நிறைவேறும்!

வீடு மாற்றவிருக்கும் முயற்சி சிறப்புடன் முடியட்டும். எல்லாம் நல்ல நிலையில் நடைபெறத்தான் இத்தனை இடர்ப்பாடுகள். புதிதாகப் பார்க்கப்போகும் வீட்டினைப் பலவகையிலும் எண்ணியபின் செல்லுமாறு வைத்துக் கொள்வது நல்லது.

இந்த முறை பொங்கல் செய்தீர்களா? நான் சென்றமுறை செய்வதற்குரிய பொருள் இல்லாது இருந்துவிட்டேன். இந்த முறை பொங்கல் இரவு செகந்நாதன் குடும்பமும், இலங்கையர் இருவரும் வந்து தமிழ்ப் பொங்கலில் கலந்து கொண்டனர். (எப்போதுமே நாங்கள் இரவு சாப்பிடும்போது அங்கு நீங்கள் உறங்கிக் கொண்டிருப்பீர்கள்)

இந்த முறை பொங்கல் வாழ்த்து யாருக்குமே அனுப்பவில்லை. ஏனோ அனுப்ப இடங்கொடுக்கவில்லை. நீங்கள் பொங்கல் செய்திருப்பீர்களோ என்றே ஐயமாகி இருந்தேன். பொழில் எந்த ஊரில் இருந்தாலும் அவனுடைய உள்ளம் நல்லதைத்தான் செய்ய விரும்பும். எல்லாச் செயல்களுமே 100 விழுக்காடு நல்லதாகப் படாமல் போனாலும் ஓரளவு சிறப்புடன் இயங்கவேண்டும் என்றே செயல்படக்கூடியவன். அவன் எழுதிய மடலில் தெளிவாக எழுதியிருந்தான். எந்தவகையிலும் அவன் எந்த ஒன்றையும் குறையாகச் சுட்டிக் காட்டவில்லை. இளமைத் துடிப்பு இருக்கும் போது தான் இங்கும் அங்கும் ஓடியாடி இயங்கமுடியும். அந்த வகையில் அவன் துடிப்பு இங்கிருந்து நினைக்கும்போது (இங்குள்ள இளைஞர்களின் பயனற்ற செயல்களிடையே) மிகவும் பெருமையாக உள்ளது. இஃது அவனுடைய தற்காலிகச் செயலே! நம் அலுவலகத்தினுள் நுழைந்து பின்பு வெளியில் சென்றவர்கள் எல்லோருமே ‘அஃது அப்படியிருக்கிறது; இப்படியிருக்கிறது; அங்கு பணி செய்ய முடியாது’ என்று நன்றாக ‘அமர்ந்து’ கொண்டு குற்றம் சாட்டத்தான் செய்தார்களே

தவிர, எவரும் அங்கு வந்து பல சுமைகளையும் குறைத்துச் செப்பமான முறை காண வழி வகுத்தாரில்லை. எனவேதான் பெர்லின் சற்றே கொஞ்சம் இடம் மாறிச் சில செயல்களைச் செய்யத் துணிந்திருக்கிறான் போலும்! எல்லோரும் தென்மொழி படிக்கிறார்கள்! புகழ்ந்து எழுதுகிறார்கள்! ஆனால் எப்படி இயங்குகிறார்கள் என்று மூலைமுடுக்கெல்லாம் சென்று நேருரை காணும் செய்தியாளர் பணியை, தானே எடுத்துக் கொண்டிருக்கும் நிலைதான்! ''இப்படியெல்லாம் எண்ணித்தான் நான் இந்தத் தனிமையில் அமைதியடைந்தேன்''. எனவே மேற்கண்டவாறுதான் நடக்கிறது என்று நினைப்பதைக் காட்டிலும், அப்படித்தான் நடக்கும் என எதிர்ப்பார்க்கிறேன். இன்னொன்று, எப்போதும் இருப்பது போலவே இருந்து கொண்டிருப்பதைக் காட்டிலும் கொஞ்சம் 'நெகிழ்வு' கொடுத்தால்தான், பலவகையிலும் புதிய எண்ணங்கள், கருத்துகள் வெளித்தோன்ற வாய்ப்பிருக்கும். எல்லாம் நன்மையில் முடியட்டும். அப்பாவின் உள்ளத்தை என்றுமே தன் உள்ளத்தில் தெய்வ நிலையில் வைத்துக் கொண்டிருக்கும் மதிப்புணர்வு அவன் எழுத்தில் மட்டும் அன்று; அவனிடமே உள்ளது. எனவே எல்லோரும் மகிழ்வாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள். நிற்க.

அப்பா! அம்மா! இங்கு நாங்கள் புறப்படும் நிலை இன்னும் சரியாகத் தெரியவில்லை. இன்னும் 2, 3 கிழமைக்குள் தெரியலாம். தமிழகத்திற்கே வருகிறோமா, அல்லது வந்து திரும்புகிறோமா, என்று தெரியாமையால் எதுவும் எழுதுவதற்கில்லை. எனினும் மார்ச்சு முடிந்து வருவோம். இதற்குமுன் 2 முறை 'நானும் தணலும் (முழுப்பெயர் செந்தணல் -$1\frac{1}{2}$ அகவைப் பையன்) மட்டும் புறப்படும் நிலை வந்து தவிர்ந்துவிட்டது. ஒன்று மாநாட்டு சமயம்! 2-ஆவது கிறித்துமசு விடுமுறை நாட்களில்! மூவரும் ஒன்றாக வருவதைத்தான் நாங்கள் விரும்புகிறோம். வருவதற்கு முன் தொலைபேசி செய்வோம். இங்குத் தணல் மிகமிகக் குறும்பு செய்கிறான். நிறைய சொற்கள் பேசுகிறான். சொல்வதைப் புரிந்தும், புரியாததைச் சொல்வதும், செய்வதுமாக இருக்கிறான். அம்மா, அப்பா, அம்மும்மா, அம்முப்பா, சித்தி, மாமா, பால், பந்து, மணி, இந்தா, என்ன, என்னது போன்ற தமிழ்ச்சொற்களும், T.V., juice, bottle, Apple, Chocolate, bye bye, NNo..., Hello, போன்ற ஆங்கிலச் சொற்களும், சில பிரெஞ்சுச் சொற்களும் பேசுகிறான். மற்றும் நம் குழந்தைகள் விளையாட்டுகளைச் செய்து காட்டுகிறான். நன்றாக, பாட்டுக்குத் தகுந்தாற்போல் ஆடுகிறான். இப்போது அடம்பிடிக்கத் தொடங்கியுள்ளான். பெரியவர்களைப் போலவே அமர்வதும், சாப்பிடுவதும், நடப்பதுமாகச் செய்ய விரும்புகிறான். நிறையப் பேச விரும்புகிறான். அவனைப் போன்ற குழந்தைகளை விரும்புகிறான். இங்குப் பெரும்பாலும் அக்கம்பக்கம் குழந்தைகள் இல்லை. கடைக்குக் கூட்டிப் போனால் அங்கு வருவார்கள்! முற்றிலும் மாறுபட்ட சூழலில் அங்கு வரும்போது அவனுக்கு மகிழ்வாக

இருக்கும். (அவனுக்கு மகிழ்வாக இருப்பதைவிட எனக்கு மகிழ்வாயிருக்கும்) நிற்க.

மற்றபடி இங்குக் குளிர் அதிகம். ஒரு நாள் 16°C இருந்தது. தக்காளிச் செடிகள் நிறைந்து பசுமையாய் இருந்த இடம் இப்போது பனியால் $\frac{1}{2}$ அடிவரை வெள்ளைச் சர்க்கரை போல் கொட்டிக் கிடக்கிறது. தணல் அதன் மேல் விளையாடிக் கொண்டிருக்கிறான். வெளியில் அதிகம் செல்வதில்லை. 1987 எப்படியுள்ளது. முதல் நாள் எப்படியிருந்தது? தொடக்க 'நொடி'யில் விழித்திருந்தீர்களா? 12 மணி அங்கு ஆகும்போது இங்கு திசம் 31 இரவு 7-30! நான் 7-30 மணிக்குத் தான் புது ஆண்டு தொடங்குவது போல் எண்ணிக் கொண்டு இரவு சிற்றுண்டி செய்தேன். எப்பொதுமே முன்னால் 4-30 மணி நேரத்தைக் கூட்டிக் கொண்டே செயல்படுவது வழக்கமாகிவிட்டது.

தணல் இப்போது தொலைபேசியில் நான் யாருடன் பேசினாலும், அவனும் சிறிது நேரம் வாங்கி அவனுக்குத் தெரிந்த சொற்களைப் பேசிவிட்டுக் கொடுப்பான். நாங்கள் பேசும்போது அவனையும் பேசவைக்க முயற்சி செய்கிறோம். வளங்கோ அண்ணன் வீட்டிலிருந்து(பிரான்சு) செய்தி எதுவும் வருவதில்லை. இன்னும் உருசியாவில் இருப்பதாகச் செய்தி வருகிறது. 'Christmas Card' அனுப்பி எல்லோரும் (10 பேர்) கையெழுத்துப் போட்டிருந்தனர். (அண்ணனைத் தவிர)

தேன், மாமா, தெள்ளியன், அறிவன் எப்படியுள்ளனர்? அறிவனைப் பற்றி அவர் அடிக்கடி பெருமையாகப் பேசுவார். அவன் தணல் குழந்தையிடமே சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கும் போது சில சமயங்களில் எனக்குச் சிறிதே சினமும் வந்திருக்கிறது. அ்து இயல்பான 'தாய்க் கோழி'ச் சினம்தான், என்பதை இப்போது உணர்கிறேன். தெள்ளியன் எப்படியுள்ளான்? நான் வரும்போது பிஞ்சு! இப்போது பார்க்க ஆவலாய் உள்ளது!

அண்ணன், அண்ணி, மொய்ம்பு, கதிர் எப்படியுள்ளனர்? பொங்கல் அன்று பாலக்காடு சென்றனரா? மொய்ம்பு இப்போதும் 'மழலைப் பேச்சுத்தான் பேசுகிறானா? மழலை மாறுவதற்குள் நான் மீண்டும் கேட்க விரும்புகிறேன். இனிமைக்குரல் இளங்கதிர் எப்படியுள்ளான். அவன் படம் ஒன்றுதான் என்னிடம் உள்ளது.

அக்கா, மாமா, இசை, செம்மல், கயல் ஆகியோர் எப்படியுள்ளனர்? அக்கா ஏன் மடலே போடுவதில்லை. என்மீது வருத்தமா? என்றுகூட எண்ணுவேன். இசை பெரிய பெண்ணாக இருப்பாளோ? செம்மலும் பெரியவனாய் இருப்பானோ? இசைக்கு இவ்வாண்டு அரசுத் தேர்வில்லையா? நல்ல மதிப்பைப் பெறட்டும்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

தேசியம், அனைத்துலகியம் பாட்டாளி வகுப்புத் தலைமை!

—குணா.

மார்க்சு காலத்தில் இருந்த முதலாளியமாக இன்றைய முதலாளிய உறவுகள் இம்மியும் மாறாமல் அப்படியே இல்லை; மேலை அய்ரோப்பியத் தொழிலாளர்களின் வகுப்பு இயக்கத்தை இவ்வாறு ஆய்வுக்கு ஆட்படுத்துவது மார்க்சியத்தை மறுப்பதற்காக அன்று. நடப்புச் சூழலை இயங்கியல் முறையியல் வழியில் கற்கவும் விளக்கவும் ஆராயவும் வேண்டும். இவ்வாறு செய்வது புரட்டலியமாயின், அதை எதிர்த்து முத்திரை குத்துவது வரட்டியம். இந் நிலையில், வரட்டியத்தை எதிர்ப்பதாகச் சிலர் வேத முறையில் பேசுவதெல்லாம் தம்முடைய சொந்தப் புண்ணை மறைக்கத் தானோ என்ற கேள்வி எழுகிறது. உலகைச் சுரண்டி உண்டு கொழுத்த பின்னர், தத்தம் வல்லரசு முதலாளியர்கள் எறிகிற எச்சில்களை உண்டு மயங்கிய நிலையில், மேலை அய்ரோப்பிய நாடுகளில் இருக்கிற தொழிலாளர் வகுப்பு இருக்கிறது. இதனால், மூன்றாம் உலக நாடுகளில் இருக்கிற ஒடுக்குண்ட மக்களின் வல்லரசு எதிர்ப்புத் தேசிய விடுதலை இயக்கங்கள்தாம், அந்த மேலை அய்ரோப்பிய தொழிலாளர் வகுப்பின் ஏலாமையை நீக்கி அவர்களின் விடுதலைக்கு வழிகோல முடியும். இன்றைய நடப்பியத்தைப் பற்றி விளக்குவதற்கே இந்த உண்மையைச் சுட்டிக் காட்டுகிறோம். இத்தகைய கூற்று ஆங்கிலேயத் தொழிலாளரையோ பிரெஞ்சுத் தொழிலாளரையோ இழிவு படுத்துவதாகச் சொல்வதாகச் சிலர் அடாவடி பேசலாம். இவ்வாறு செய்வது மேலைச் சார்பு மரபு மார்க்சியத்தால் வந்த வரட்டுத்தனத்தோடு ஒட்டிப் பிறந்த ஒரு தனிப் புரட்டல் என்று தானே சொல்ல வேண்டும்?

முதலாளியத் தொழிற் புரட்சி பெருமளவில் முதன் முதலில் எழுந்த நாடு இங்கிலாந்து. இதுவே உலக முதலாளியத்தின் முன்னோடி. மரபு மார்க்சியப் பார்வையில் இந்த இங்கிலாந்து நாட்டுத் தொழிலாளர் வகுப்புத்தான் பாட்டாளியப் புரட்சிக்கு முன்னோடியாக இருந்திருக்க வேண்டும். ஆனால் நடந்தது என்ன? முதலாளிய வாழ்க்கைத் திணையின் கருப்பகுதியாகிய (Core) இங்கிலாந்து நாட்டில் ஓர் ஒப்புரவு(சோசலிச)ப் புரட்சி இதுவரை வெடித்ததில்லை. முதலாளியத்தின் அக் கருப்பகுதியைச் சுற்றி இருக்கிற புறச்சுற்றுப்(Periphery) பகுதியில் பழைய உருசியா இருந்தது. அரை நிலக்கிழமைத் தன்மை கொண்ட அந்தப் பிற்போக்குச் சாரிய உருசியாவில் தானே ஒரு பாட்டாளியப் புரட்சி முதன்முதலில் வெற்றி பெற்றது? உழவர்குடி மிகப் பெரும்பான்மையராக இருந்த சீனத்திலும் வியத்நாமிலும் தொழிலாளர் தலைமையிலான புரட்சிகள் வாகை சூடின;

மார்க்சு, எங்கெல்சு ஆகியோரின் கணிப்புகள் இவ்வாறு மாற்றத் திற்கு உள்ளானதைப் பற்றிச் சொன்னால், அது மார்க்சையும் எங்கெல்சையும் கொச்சைப்படுத்துகிற பொதுவுடைமை எதிர்ப் புக் கருத்து ஆகுமா?

ஒரு குறிப்பிட்ட சூழலில் எழுந்த ஒரு கருதுகோள், வேறொரு சூழலில் பொய்த்துப் போகவோ மறுக்கப்படவோ நேர்வது இயற்கை. இந்த உண்மையை இயங்கியல் அறிவுநெறிக்கு ஒவ்வா தெனச் சொல்ல முடியுமா? உண்மைகள் யாவும் எடுத்த எடுப்பி லேயே வெட்டவெளிச்சமாகத் தெரிகிற முற்றுமை உண்மைக ளாகவா தோன்றுகின்றன? பகுதி பகுதியாகத் தென்படுகின்ற வெளிப்பாடுகளைப் பல்வேறு காலங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு கோணங்களில் பல்வேறு நிலையினர் பல்வேறு நாட்டங்க ளுடன் பார்த்து விளங்கிக் கொள்கிற பகுதி உண்மைகளாகத் தாமே உரு மலர்ந்து அவை யாவும் ஒரு முழு உண்மையாகத் திரி பாக்கம் பெறுகின்றன!

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பாட்டாளிய வகுப்பை மார்க்சு கடிந்து கொண்டதும் உண்டு. உலகிலேயே கடைசியாக ஒரு புரட்சியைப் பார்க்கவிருக்கிற ஒரு பாட்டாளிய வகுப்பாக அஃது இருக்கலாமென மார்க்சு ஒரு காலத்தில் மனம் நொந்து சொன்னார். தனியான ஒரு புறமை நிலையைத் தனித்து வைத்துப் பார்த்ததால் வந்த ஒரு முடிவுதான் இக்கருத்து என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அதை விடுத்து, ஆங்கிலேயத் தொழிலாளர் வகுப்புக்கு எதிரான மிகப் பெரிய காழ்ப்பை மார்க்சு காட்டினாரென யாராவது சொன்னால், அது தினையைப் பனையாக்கித் திரித்துப் புரட்டி மார்க்சைக் கொச்சைப்படுத்துவது என்று தானே சொல்ல வேண்டும்?

அதே போன்று, தமிழகப் பாட்டாளிய வகுப்பும் கூட பொருளியத்தில் ஆழச் சிக்கிக் கொண்டுள்ளது. குமுகப் புரட்சி யென்னும் நோக்கத்தைப் பொதுவாக மறந்து கிடக்கிறது. இந்த உண்மையைச் சுட்டிக் காட்டுவது அப் பாட்டாளிய வகுப்பை எதிர்க்கவோ எடுத்தெறிந்து பேசவோ இழிவு படுத்தவோ அல்ல. அப்புரட்சித் தன்மையை அதனிடம் மீண்டும் எவ்வாறு உசுப்பி விட்டு நிலைநிறுத்துவது என்னும் கேள்விக்கு விடை தேடப் புறப் பட்ட போது எழுந்த கருத்துகளைக் கட்டுரையாக ஆக்குகையில் அமைந்தவை அவையாகும். பாட்டாளிய வகுப்பினுடைய கொள்கைத் தலைமையை எதிர்ப்பதாகத் திரித்துப் புரட்டுகிற ஒரு கூற்றாக இதைச் சொல்வது ஓர் அடாவடிதானே? பகுதிக் கும் முழுமைக்கும் இடையிலான இயங்கியலைப் படித்துப் படித்துச் சொல்கிற கட்டுரையாசிரியரே என்னுடைய கருதுகோளின் ஒரு தனிக் கூறை மட்டுமே எடுத்துக் கொண்டு ஒருதலையாகப் பெரிதுபடுத்தி முற்றுமையாக்கிக் காட்ட முயல்கிறார். பகுதிக் கும் முழுமைக்கும் இடையிலான இயங்கியல் இலக்கணமே இங்கு மாயமாக மறைந்து போகிறதே!

'பாட்டாளிய வகுப்பின் வல்லாண்மை இன்று காலத்துக்கு ஒவ்வாது; தேவையற்றது' எனச் சொல்கின்ற மேலை அய்ரோப்பியப் பொதுவுடைமைக் கட்சிகளின் நிலையுடன் என்னுடைய கருத்து ஒன்றிவிடுவதாகக் கட்டுரையாசிரியர் சொல்லாமல் சொல்கிறார். எம் போன்றோரை வாயடைக்கச் செய்ய வேண்டி இல்லாததையும் பொல்லாததையும் ஏற்றிச் சொல்கிற உத்தி இதுவோ? சொந்தமாக அலசிப் பார்க்கவும் எண்ணிப் பார்க்கவும் செய்வதைத் தடுக்க வேண்டி எம் போன்றோரிடம் ஓர் அறிவு அச்சத்தை ஏற்படுத்துகின்ற நோக்கத்தையும் கொண்டதுவோ? வரட்டியக் கூட்டுக்குள் அறிவை அடைத்து வைக்கப் பார்க்கின்ற ஒரு முயற்சியோ? என்னுடைய எழுத்துகளை மொத்தமாக வைத்துப் பார்த்தாலும் தனித்தனியே எடுத்து அலசினாலும் பாட்டாளிய வகுப்பு வல்லாண்மை என்னும் கொள்கைக்கு எதிர்ப்பான நிலையைப் பார்க்க முடியாது. இவ்வாறிருந்தும், இந்தக் கணையைக் கட்டுரையாசிரியர் ஏவுவதன் உண்மையான நோக்கம் விளங்கவில்லை.

ஆட்சியை வென்று ஒரு புதிய அரசியல் வாழ்வியலைக் கட்டியமைக்கின்ற பாட்டாளிய வகுப்புக்கு என்றும் இடர் உண்டு; தூக்கியெறியப்பட்ட முதலாளிய வகுப்பு அகத்தே இருந்தும் புறத்தே இருந்தும் சூழ்ச்சியால் கெடுத்தோ தூக்கியெறிந்தோ சுரண்டல் உறவுகளை மீட்கப் பார்க்கும். இதைத் தடுக்கக்கூடிய அரசுக் கொள்கையே பாட்டாளிய வகுப்பு வல்லாண்மை. பாட்டாளிய அரசினுடைய அரசு நெறியும் ஒழுங்கும்தாம் அக்கொள்கை. புரட்சியின் இயங்கியலைத் தெரிந்து கடைப்பிடிக்கின்ற நேர்மையான புரட்சியர் யாரும் இந்த அடிப்படை நெறியைக் கைவிட முடியாது. அவ்வாறு கைவிடுபவர் எதிர்ப் புரட்சிக்குச் செங்கம்பளம் விரிப்பவராகத்தாம் இருக்க முடியும்;

பாட்டாளிய வகுப்பு வல்லாண்மை என்னும் கொள்கையைக் கடைப்பிடிக்கிற பாங்கு இதனால் யாதொரு திறனாய்வுக்கும் ஆட்படக் கூடாதெனப் பொருள் படாது. ஏனெனில், புரட்சி வழியில் ஆட்சியைப் பிடித்துப் பாட்டாளிய வகுப்பு வல்லாண்மையைக் கட்டிய கட்சிகளின் தலைமைகள் மெள்ள மெள்ளக் கெட்டழிந்து உண்மையையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்; அவற்றில் எதிர்ப்புரட்சியர் ஊடுருவியதே அதற்கான காரணம்; இவ்வாறு ஓர் அதிகார வகுப்புக் கும்பலோ புரட்டர் கும்பலோ ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதுண்டு. ஒரு சூழ்ச்சிக்கார எதிர்ப்புரட்சிக் கும்பலின் வல்லாண்மையாகப் பாட்டாளிய வகுப்பு வல்லாண்மை என்னும் அரசு நெறியைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கியதை உருசியாவிலும் சீனத்திலும் வேறு சில ஒப்புரவு நாடுகளிலும் பார்க்கிறோம். உழைக்கும் மக்களின் அடிப்படைக் குடியாட்சி உரிமைகளும் இதனால் மறுக்கப்பட நேர்ந்தது; அஞ்சாமல் கருத்துரைக்கின்ற உரிமை இன்றி மக்கள் இங்கெல்லாம் கெடுபிடி ஆட்சிகளுக்குக் கீழடங்க வேண்டி வந்தது;

இதனால், சோவியத்து மாதிரியையோ சீன மாதிரியையோ பாட்டாளிய வகுப்பு வல்லாண்மைக்கான தனிப்பெரும் மாதிரியாக இருப்பதாகச் சொல்ல முடியுமா? இந்தச் சோவியத்து மாதிரியையோ சீன மாதிரியையோ பாட்டாளிய வகுப்பு வல்லாண்மையில் உண்மையான மாதிரி என்று அடிமைத்தனமாக ஏற்றுக் கொண்டால்தான் ஒருவர் உண்மையான மார்க்சியராக இருக்க முடியுமா? இதை மறுப்பவரெல்லாம் பொதுவுடைமை எதிர்ப்பாளரோ? உள்ளதைச் சொல்வது பாட்டாளிய வகுப்பு வல்லாண்மைக் கொள்கையையே எதிர்ப்பது ஆகாது. இந்த உண்மை தெரிந்தும் சிலர் இவ்வாறு குற்றம் சாட்டுவராயின், அஃது அறிவச்சத்தை ஏற்படுத்தப் பார்க்கிற ஒரு பூச்சாண்டியாகத்தான் இருக்குமேயன்றி அளவையியல் வழியிலான ஒரு திறனாய்வாக இருக்க முடியாது.

பாட்டாளிய வகுப்பின் விடுதலைக்கான கருத்துகள் அவ்வகுப்பிலிருந்து அல்லாமல் பிற வகுப்பினைச் சார்ந்த அறிவர்களிடமிருந்துதாம் வந்தன என்ற வரலாற்று உண்மையை இலெனின் சொன்னதைக் கட்டுரையாசிரியர் சுட்டிக் காட்டுகின்றார். இது நல்ல பொருத்தம். "முதலாளிய உறவுகளின் மீளாக்கம்" என்னும் சூழலில் தமிழகத் தொழிலாளர் வகுப்பும் கூட "அக வறுமை"க்கு ஆட்பட்டுக் கையறு நிலையில் இருக்கிறது. இத்தகைய சூழலில் வருங்கால அறிவர்களும் வருங்காலத் தொழிலாளர்களும் ஆக வல்ல ஒரு வளர்ச்சியின் புனிற்று (nascent) (இளம்பிறவி) நிலையாகத்தான் மாணவர்கள் பொதுவாக இருக்கின்றனர். இந்த மாணவர்களிடம் புரட்சி எண்ணங்கள் ஊற்றெடுக்கவும் உருவெடுக்கவும் செய்வது எளிது. ஒரு புரட்சி அறிவுச் சூழலையும் செயற்பாட்டையும் தோற்றுவிக்க வல்ல வினையூக்கியாக அவர்கள் இருக்க முடியும். இவ்வாறு சொல்கையில், பாட்டாளியப் புரட்சிக்கு வேண்டிய தலைமையை மாணவர்கள் மட்டுமே தர முடியுமெனப் பொருள்படாது, நான் அவ்வாறு சொல்லவும் இல்லை. அவ்வாறு சொன்னதாகச் சொல்வது என்னுடைய கூற்றின் ஒரு பகுதியை முற்றுமைப்படுத்துகின்ற கொச்சையாக்கம் என்றே சொல்ல வேண்டும்.

இன்றையச் சூழலில் மாணவர்களை முன்னிலைப் படுத்தினாலும் கூட பாட்டாளிய வகுப்பினுடைய ஆன்மாவாகிய(ஓர்மையாகிய) மார்க்சிய இலெனினியக் கொள்கையைத்தான் தலைமையில் இருத்த வேண்டுமென என்னுடைய கட்டுரை சொல்கிறது. இதன் பொருள் என்ன? பாட்டாளிய வகுப்பின் நலன்களைத் தலைமையில் இருத்துவது என்றுதானே இதற்குப் பொருள் கொள்ள வேண்டும்? அகத்தில் முதலாளிகளாகவும் புறத்தில் தொழிலாளிகளாகவும் இருக்கிற எத்தனையோ தொழிலாளர்களை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். புறத்தால் குட்டி முதலாளிய அறிவராகவும் மாணவராகவும் இருப்பினும், ஓர்மையென்னும் அகத்தால் பாட்டாளியராக இருப்பவர்களும் தம்முடைய கண்

னுக்குத் தெரியவில்லையா? இதனால்தான், பாட்டாளிய வகுப்பி னுடைய அறிவு நெறியாகிய மார்க்சிய இலெனினியக் கொள்கையையே தலைமையில் இருத்த வேண்டுமெனக் கட்டுரையில் சொல்லவும் செய்தேன்.

''விதைக்க வேண்டும்'' எனச் சொன்னால், உடனே 'விதைத்தால் மட்டும் போதுமா? தண்ணீர் கட்ட வேண்டாமா? களை எடுக்க வேண்டாமா? அறுக்க வேண்டாமா?'' என்பன போன்ற கேள்விகளை அடுக்கடுக்காகத் தொடுத்து ஆளை மடக்குவது அடாவடித்தனம். 1919-ஆம் ஆண்டு ''மே 4 இயக்கம்''தான் சீனப் பொதுவுடைமைக் கட்சிக்கு வித்திட்டது எனச் சொன்னால், ''அப்படியாயின், ஒரு பாட்டாளிய வகுப்புக் கட்சியைக் கட்டியதே ஒரு மாணவர் இயக்கம்தான் என்கிறீரா?'' என மடக்கினால் அது திரித்துப் புரட்டுவதுதானே? இப்படி ஏட்டிக்குப் போட்டியாகக் கேட்டு வைத்தால் அரண்டு போய் வாய் செத்து ஊமையாகி விடுவாரென யாரும் கனவு காண வேண்டாம். மாணவர்கள் என்பவர்களே பல்வேறு வகுப்புகளிலிருந்து வருபவர்கள் தாமே? இவர்களில் சிலர் பாட்டாளிய மயமாகிய பாட்டாளிய அறிவர்களாகவும் முழு நேரப் புரட்சியராகவும் முழு நேரக் கட்சி ஊழியர்களாகவும் பாட்டாளியக் கட்சிகளில் தலைமக்களாகவும் அமைந்ததுதானே பொதுவுடைமைக் கட்சிகளினதும் குழுக்களினதும் வரலாறு?

கருநாடகத் தமிழர்கள் தங்களின் பிள்ளைகளுக்குத் தாய்மொழியைக் கற்பிக்கின்ற அடிப்படை உரிமையைத் தரக் கன்னட இனவெறி அரசு மறுக்கிறது. இந்தத் தாய்மொழி உரிமையைக் காக்க 1982-ஆம் ஆண்டு தொட்டு எழுந்த மொழிப் போராட்டத்தில் பல தமிழிளைஞர்கள் கொல்லப்பட்டு உயிரிழந்ததுண்டு. இதைப் பற்றிப் ''புரட்சிகள்'' வாய் திறந்து திருவாய் மொழி அருளியதில்லை. ஆனால் தாய்மொழி உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களைப் பார்த்து ''இனவெறியர்'' பட்டம் கட்ட மட்டும் தவறியதில்லை. இவ்வாறு உரிமை கேட்பவரை ''இனவெறியர்'' எனச் சொல்வது ஒரு கொச்சைப்படுத்தல். இது போன்ற பேர்வழிகளா தமிழகத்தின் விடுதலைக்கு வரிந்து கட்டிக் கொண்டு போராடப் போகின்றனர் எனக் கேட்டால், அஃது அளவையியல் வழியிலான ஒரு திறனாய்வு. இந்த வகையைச் சேர்ந்தவர்கள்தாம் பகுதியை முழுமையாக்கி முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடப் பார்க்கின்றனர். இவர்களின் அடாவடித்தனம் எல்லாம் திறனாய்வு ஆகாது. இவர்கள் திரித்துப் புரட்டிப் பூச்சாண்டி காட்டித் தங்களுடைய ''செயல் உத்தி''யால் தமிழக விடுதலையை அணைத்துக் கெடுக்கப் பார்ப்பதாக நாம் சொல்வது அந்த வழக்குரையின் அடிப்படையிலான ஒரு குற்றச்சாட்டு. எந்த அளவுக்கு இஃது உண்மை என்பதை இனஉணர்வு கொண்ட தமிழர்கள் புரிந்து கொள்ளத்தான் போகின்றனர்.

உலக நடுவத்தைப் பற்றி :

இறுதியாக, பொதுவுடைமைக் கட்சிகளுக்கு ஓர் உலக நடுவம் வேண்டும் என்னும் கேள்விக்கு வருவோம். இரண்டாம் மூன்றும் பொதுவுடைமை உலகாயங்கள் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது புரட்டலிய எதிர்ப்புதான் என்பதை நாம் மறந்ததும் இல்லை; மறுத்ததுமில்லை. கேள்வியெல்லாம் இதுதான்; இவ்வாறு தோன்றிய இரண்டு உலகாயங்களால் நேரடியாக இறங்கி வெற்றியுடன் எங்காவது புரட்சியைச் செய்ய முடிந்ததா? இல்லையே. அத்துடன் பெரும்பான்மை நாடுகளைச் சேர்ந்த எல்லாப் பொதுவுடைமை அமைப்புகளும் பங்கெடுக்கவில்லை; மூன்றுவது உலகாயத்தை இலெனின் தோற்றுவித்த போதும் கூடச் செருமானியப் பொதுவுடைமைக் கட்சி போன்ற ஒருசில கட்சிகள்தாம் பங்கெடுத்தன. அடுத்து இரண்டாம் உலகப் போரில் சோவியத்து ஒன்றியத்துடன் ஒரு நற்பணியாகச் சேர்ந்த முதலாளிய வல்லரசுகளின் அய்யத்தைக் களைவதையே ஒரு பெரிய நோக்கமாகக் கொண்டு 1943-ஆம் ஆண்டில் மூன்றுவது பொதுவுடைமை உலகாயம் கலைக்கப்பட்டது இதை ஆவணங்கள் காட்டுகின்றன. இந்நிலையில், இந்த மூன்றுவது உலகாயத்தைக் கலைத்ததற்காகச் சொல்லப்பட்ட காரணங்களோ இன்று முற்றிலும் பொய்த்துவிடவுமில்லை. 1960களில் சீனக் கட்சிக்கும் சோவியத்துக் கட்சிக்கும் இடையில் மூண்ட மாபெரும் கருத்துப் போரைத் தொடர்ந்து பலநாட்டுப் பொதுவுடைமைக் கட்சிகள் உடைபட்டன. அப்போது மாசேதுங் ஒரு புதிய பொதுவுடைமை உலகாயத்தை நிறுவுவாரெனப் பலர் கணியம் சொல்லினர்; ஆனால், அவ்வந்நாட்டுப் புரட்சியை அந்தந்த நாட்டு மக்கள்தாம் நடத்த வேண்டுமே யன்றிப் புரட்சி செய்ய ஓர் உலகத் தலைமையகம் தேவை இல்லையென மாசேதுங்கும் ஒரு திட்டவட்டமான நிலையை எடுக்க வேண்டி வந்தது.

இந்நிலையில் பொதுவுடைமை உலகாயம் ஒன்றின் தலைமைக்கும் ஆணைக்கும் கீழே ஒரு நாட்டு மக்கள் அடங்கினால்தான் அவர்கள் புரட்சி செய்ய முடியுமென்பது ஒரு சிலர் வலிந்து வைக்கிற ஒரு கருதுகோளாகத்தான் இருக்கமுடியும். இந்தக் கருதுகோள் தவறு எனச் சொன்னால் என்ன தவறு? அத்தகைய உலக நடுவம் இருக்கத்தான் வேண்டுமென அடித்துச் சொல்கின்றனர் சிலர்; இந்த நிலையை மறுப்பவர்கள் எல்லாம் அனைத்துலகியத்திற்கு எதிரானவர்களென்றால், அஃது ஒரு பூச்சாண்டிதானே? இது வரை இருக்கிற உலகப் பொதுவுடைமை இயக்கத்தின் வரலாற்றை வைத்துக் கொண்டு அத்தகைய நடுவம் தேவையில்லை எனச் சொல்பவரெல்லாம் புரட்டலியர் ஆகிவிடுவாரோ? அவ்வாறு சொல்வது புரட்டலியமாயின் அத்தகைய நடுவம் இருக்கத்தான் வேண்டுமெனக் கற்பித்துச் சொல்வது இடறும் பொழுதும் அறியா வரட்டியம் இல்லையா?

இது, பாட்டுக்கு எதிர்ப்பாட்டு. தன் முதுகு தனக்குத் தெரியாத நிலையில் புரட்டலியத்தையும் வரட்டியத்தையும் எதிர்ப்பதாகத் தனக்குத் தானே சொல்லிக் கொள்வது ஒரு வகைப் போலித்தனம் என்பதை அம்பலப்படுத்துகிற ஒரு கூற்று. மார்க்சியம் யாருடைய குத்தகையும் அன்று "மார்க்சியத்திற்காகத் தான் மக்கள்" எனச் சொல்லாமல் சொல்கிற வரட்டியமே அடிப்படையில் தவறு. மக்களுக்குத்தான் மார்க்சியமே யன்றி மார்க்சியத்திற்காகத்தாம் மக்கள் எனக் கருதுவது, பொதுவாக செருப்புக்கேற்ப காலை வெட்டிக் கொள்வது போலாகும். தமிழக மக்களின் அடிமைத்தளையை அறுக்கவும் அவலம் நீக்கவும் பொதுவுடைமைக் கொள்கையும் அறிவு நெறியும் இன்றியமையாதன. எளியராயினும் பொதுநலனும் இனமானமும் கொண்ட தமிழ் நெஞ்சங்களுக்கு இந்த அறிவுடைமை ஓரளவேனும் உண்டு. மொழியும் நாடும அறியாத சோற்றுப் பிண்டங்கள் இந்தக் கணக்கில் அடங்காமல் போகலாம். பூசாரிய "மார்க்சியம்" ஒழிந்து, மார்க்சிய அறிவு நெறி தமிழ் மக்களுடனும் மரபுடனும் ஒன்றுகையில் மட்டுமே தமிழக விடுதலை கைகூடும். அப்போது அமையக் கூடிய ஒப்புரவு வாழ்வியல் ஒரு பொதுவுடைமை வாழ்வியலாக மலர்ந்து மணம் வீசுகையில்தான் பொதுவுடைமைக்காக மக்கள் என்னும் ஒரு புதிய அறம் தழைக்கும்.

இன்றைய சூழலில் மார்க்சியத்திற்காகத்தாம் மக்கள் எனக் கருதுவது வரட்டியரிடம் தெரிகிற ஓர் இளம்பிள்ளை முடக்குத்தானே? ஒரு செயல் உத்தியாகத்தான் தமிழக விடுதலையை ஆதரிக்கிறோம் எனச் சொல்லி ஒரு பொய்மானை ஏவி விட்டாலும் நாம் நம்முடைய விடுதலை நெறியிலிருந்து தடம் புரள மாட்டோம். சொந்த வரலாறு தெரியாமல் புரட்சி இல்லை. இந்நிலையில், தமிழ் மக்களின் வரலாற்றைப் புதிய பார்ப்பனிய இருட்டடிப்புகளிலிருந்து மீட்க முயல்வது போன்ற பணிகளில் உரிய கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய முயற்சிகளுக்கு இடையில் தேசிய இனச் சிக்கலைக் குழந்தை வகுப்புப் பாடம் என்னும் தரத்திலேயே வைத்து வழக்காடிக் கொண்டு நாம் நேரத்தை வீணாக்க வேண்டியுள்ளது. இத்தகைய திசை திருப்பல்களையும் பாராது தமிழக விடுதலைக்கு அறிவாலும் செயலாலும் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்கள் அவ்விடுதலை நெறியில் உறுதியாக நிற்க வேண்டும். இதுவே தமிழ் மக்களிடமும் தமிழ் மரபுடனும் ஒட்டாத வரட்டியர்களுக்கும் புரட்டர்களுக்கும் தலை மேல் வைக்கிற குட்டாக இருக்கும்.

பெயர்ப் பலகைப் பொதுவுடைமைக் கட்சிகளைச் செல்லாக் காசுகளாக்கி மார்க்சியத்தைத் தன்வயமாக்கிக் கொண்ட விடுதலை இயக்கமாக மலர்வதற்கான முதற்கட்டம் இதுவேயாகும்.

(முற்றும்)

தனித்தமிழைப் போற்றி வாழ்வீர்!

(புலவர். ப. எழில்வாணன், க. மு., கல். இ.,)

தனித்தமிழைப் போற்றாதார் நாளு மிங்கே
    தமிழரென்று சொல்லுதலும் நன்று தானோ?
இனித்தமிழைப் போற்றாமல் தந்நலத்தை
    இருகண்ணாய்க் காப்பவரும் தமிழர் தாமோ?
கனித்தமிழில் விழுப்பொருளைப் பேசு தற்குக்
    களிக்காமல் சலிப்பவரும் தொண்டர் தாமோ?
தனித்தமிழை உயிர்போலக் கருதல் இன்றித்
    தமிழ்மக்கள் வாழ்வதுவும் வாழ்வு தானோ?

அழியாத இலக்கணங்கள் இலக்கி யங்கள்
    அமிழ்தாக நமக்கிங்கே வாய்த்தி ருந்தும்
விழியாக உயிராக நாளும் எண்ணி
    வேந்தர்கள் போற்றியதை அறிந்தி ருந்தும்
தொழிலாகத் தமிழ்மொழியை வளர்ப்ப தொன்றே
    தொல்புலவோர் கொண்டதனைத் தெரிந்தி ருந்தும்
இழிவாகத் தமிழ்வளர்ப்பை நாமும் எண்ணி
    இருத்தலிங்கே கொடுமையிலும் கொடுமை யன்றோ!

அறிவுமிகு மறைமலையாம் அடிக ளாரும்
    அன் றிங்கே தோன்றாமல் இருந்தி ருந்தால்,
அறிவுடையோர் போற்றுதனித் தமிழை இன்று
    யாரறிந்து நூல்வடிப்பார்? வளர்த்தி ருப்பார்?
செறிவுடனே அவர்வழியில் தேவ நேயர்
    செந்தமிழில் நூலெழுதா(து) ஓய்ந்தி ருப்பின்
உருவினிலே ஏதிங்கே தனித்த மிழ்தான்?
    ஒளிவிட்டுக் கலப்படமே மிகுந்தி ருக்கும்!

உயிராகத் தமிழ்மொழியை நினைந்து நெஞ்சில்
    உருக்குலையாத் தனித்தமிழில் ‘கனிச்சா றீந்து
கயிறாகக் கதைகளையும் திரிப்ப வர்கள்
    சண்டிங்கே காழ்ப்புணர்வு நாணம் கொள்ள
அயராது நாளெல்லாம் உழைத்து நிற்கும்
    அருமைமிகு பாவலரே(று) அவர்க ளும்மே
துயராக இதையெண்ணி விடுத்தி ருந்தால்
    துலங்காமல் போயிருக்கும் தனித்த மிழ்தான்!

அவர்பெருமை அதனாலே அறிந்து நாளும்
    அறிவோடு திகழ்ந்திடவே உறுதி கொண்டே
அவர்வழியில் சென்றிடுவீர்! போற்றி வாழ்வீர்!
    அனைவருமே தனித்தமிழைத் தழுவி நிற்க

தமிழக தமிழ்நெறி!

பாவலர். அ. பு. திருமாலனார்.

பர். உ. வே. சாமிநாதர் ஆங்காங்கே கிடந்த ஓலைச்சுவடிகளைத் திரட்டி நமக்குக் கழக இலக்கியங்களைச் சேர்த்துக் கொடுத்திருக்கின்றார். அதற்காக நாம் அவருக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கின்றோம். 36 கழக இலக்கியங்களை அவர் திரட்டித் தந்திருக்கின்றார். அதற்காக நன்றிக்கடன் பட்டிருக்கின்றோம். ஆனால் கி. வா. ச. தமிழ் சாமிநாதர் போட்ட ''பிச்சை'' என்கிறார். அதை நாம் ஏற்கவில்லை. இப்படிப்பட்ட மன இறுக்கம் உடையவர்கள் தமிழர்களை வாழவா விடுவார்கள்? நாம் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். கதையில் ஒன்றைச் சொல்வார்களே அதேபோல் பாம்பைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு குடும்பம் நடத்திய கதைதான்.

அந்தக் கழக இலக்கியங்களை ஆய்வு செய்தார்கள். அதில் வரலாறு இருக்குமா? அதில் சான்றுகள் கிடைக்குமா என்று; எனவே ஆங்கிலேயர்கள் சொன்ன அந்த உண்மைகள் நம் கழக இலக்கியத்திலே தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும் ஆங்காங்கே அதற்குரிய சான்றுகள் நமக்குக் கிடைத்தன. அந்தச் சான்றுகளிலே ஒன்று சிலப்பதிகாரத்திலே சொல்லப் படுகின்றது. சிலப்பதிகாரத்தைக் கண்டார்கள்; சொன்னார்கள், புறநானூற்றைக் கண்டார்கள்; சொன்னார்கள். ''பஃறுளி யாற்றின் மணலைவிட அதிகமான காலம்-அந்த மணலின் எண்ணிக்கை எவ்வளவோ அதைவிடக் கூடுதலான காலம் - நீ வாழ வேண்டும்'' என்று புலவர் ஒருவர் மன்னனை வாழ்த்தினார்:

(முன் பக்கத் தொடர்ச்சி)

எவர்வந்து வழிமுறைகள் கூறி னாலும்
ஏற்றவற்றை நன்காய்ந்தே ஏற்றுக் கொள்வீர்!
சுவர்வைத்தே சித்திரமும்! செந்த மிழ்தான்
சுவரிங்கே! அதுவின்றி வாழ்வும் ஏது?

புரியாத மாந்தர்களே, புரிந்து கொள்வீர்!
புலனடிமை கொண்டவரே தெரிந்து கொள்வீர்!
அறியாத பிறமொழிகள் கற்கு முன்னே
அறிவூட்டும் தாய்மொழியாம் தமிழை இன்றே
குறியாகக் கொண்டிங்கே மகிழ்ந்து கற்பீர்!
கொள்கையெனத் தனித்தமிழைப் போற்றி நிற்பீர்!
பெரிதாகத் தனித்தமிழை வளர்ப்ப தொன்றில்
பேரார்வம் தனிமுயற்சி கொண்டு வாழ்வீர்!

அப்படிப் புலவர் ஒருவர் பாடுகின்றார் என்றால் பஃறுளி ஆற்றைப் பற்றி அவர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். இன்றைக்குப் பஃறுளியாறு தமிழ்நாட்டில் இருக்கின்றதா?... எங்கே போய் விட்டது, அந்தப் பஃறுளியாறு?... அவன் அன்றைக்கு வரலாற்றில் சொல்லுகின்றான். பஃறுளியாறு இருந்தது; குமரியாறு இருந்தது; இறுகாதவ ராறு இருந்தது என்று ஆறுகளைப் பற்றிச் சொல்லுகின்றான். இன்று மலேசியாவிலிருந்து இந்தியாவிற்கு 1500 சற்கள் கப்பலேறித்தான் செல்ல வேண்டும். அன்றைக்குக் கப்பலும் கிடையாது; ஒன்றும் கிடையாது. எல்லாந் தரைதான். எல்லாம் ஒன்றாக இருந்த பெரிய நிலப்பரப்பு. அந்த நிலப்பரப்பு இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அந்த நிலப்பரப்பில் முதன் முதலாகத் தோன்றியவன் தான் தமிழன். தமிழன் என்று சொல்லக் கூடாது அவனை. அப்பொழுது தமிழ் பிறக்கவில்லை. எனவே முதல் மாந்தன் தோன்றினான். அந்த இலெமூர் மாந்தன் குமரி மாந்தன். அந்த இன வளர்ச்சிதான் நம்முடைய வளர்ச்சி. அங்கே தோன்றிய அந்த மாந்தனுடைய நாகரிகம் பெற்ற மொழிதான் இந்தத் தமிழ்மொழி. அந்த உணர்வு தோன்றியது 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன். அந்த மொழிக்கு இலக்கண வரி வடிவம் தோன்றியது 25 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன். அந்த மொழிக்குச் செம்மையான இலக்கியப் பாவியங்கள் உருவாகியது 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்.

முதற் கழகக் காலம் 9990 ஆண்டுகள். இன்றைக்கு ஆங்கிலம் 1000 ஆண்டுகளுக்கு முந்தி ஒன்றுமில்லை. ஆங்கிலம் பயின்றவருக்கு அது நன்றாகத் தெரியும். 'சாசர்' காலத்து ஆங்கிலம் 'சேக்சுபிரியர்' காலத்தில் செல்லவே செல்லாது. சேக்சுபிரியர் காலத்து ஆங்கிலம் இப்பொழுதுள்ளவர்களுக்குத் தெரியாது. பேச முடியாது. அந்த 'ஆம்லட்' போன்ற நாடகங்களைப் படித்தால் விளங்காது. ஆக ஆங்கிலம் அப்படி. ஆங்கிலத்தைக் குறைத்து மதிப்பிடுவதற்காக இதைச் சொல்லவில்லை.

5-ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மதுரையில் நடத்தப்பட்டது. அந்த மாநாட்டிற்கு நம்முடைய பேராசிரியர்கள் எல்லாம் சென்றிருந்தார்கள். அதிலே எழுத்துச் சீர்திருத்தம் செய்யக் கூடிய பேராசிரியர்கள் கட்டுரைகளை எல்லாம் கொண்டு சென்றிருந்தார்கள். அந்த எழுத்தை அப்படி மாற்ற வேண்டும் இந்த எழுத்தை இப்படி மாற்ற வேண்டும் என்று. 'ணை'- இப்படிப் போட்டால் வராது; 'ணை'-இப்படித்தான் போட வேண்டும் என்று பேசினார்கள். 'அ' என்ற உயிர்க் குற்றியலுக்கு நெடிலோசையை அ'தாவது மெய்யெழுத்திலே நெடிலோசையை (அா) குறிக்கத்தக்க கால் வாங்கி இருக்கின்றார்கள். இ'து எவ்வளவு பெரிய மொழிக் கொலை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

எடுப்பார் கைப்பிள்ளை இந்தத் தமிழ் சீர்திருத்தம் என்ற பெயரில் எதையெதை எப்படிச் செய்ய வேண்டுமோ அதையதை

அப்படிச் செய்ய வேண்டும். பேராசிரியன் சொல்லி விட்டால் எல்லாம் உண்மையாகி விடுமா? எனவே இந்தப் பேராசிரியர்க ளெல்லாரும் அங்கு கட்டுரை படைக்கப் போனார்கள். அங்கே பேசுகின்றார்கள். எழுத்திலே இப்படி மாற்ற வேண்டும் அப்படி மாற்ற வேண்டும். இதை அப்படிச் செய்ய வேண்டும், அதை இப்படிச் செய்ய வேண்டும்; எனவே தமிழில் உள்ள எழுத்துகளை குறைத்தால்தான் அஃது உலகளாவிய மொழியாக வரமுடியும் என்று அத்தனைப் பேராசிரியர்களும் கட்டுரை படைத்தார்கள்.

இங்கிலாந்திலிருந்து ஒருவர் வந்தார். 'ஏ. ஈ. ஆசர்' என்பது அவர் பெயர். அவர் தமிழறிஞர். தமிழ் படித்திருக்கின்றார். மாநாட்டிலே தெருக்கூத்துப் பாடல்களை பாடினார். எனவே தமிழ் இலக்கியத்தை அவர் அந்த அளவிற்கு சுவைத்துப் படித்திருக்கின்றார். அவர் பேசும் பொழுது கடைசியாகச் சொல்லுகின்றார்,... "இ ந் த த் தமிழ்மொழியானது இனி... திருத்துவதற்கோ அதைப் புதுக்குவதற்கோ உரிய மொழியன்று. அது திருத்தம் செய்யப் பெற்ற மொழி. அதைத் திருத்துவதற்கு ஒன்றுமேயில்லை. இங்கே பேராசிரியர்கள் பலர் ஆங்கில மொழியை உவமை காட்டி அஃது உலகளாவிய மொழியாக் இருப்பதற்குக் காரணம் அந்த மொழியினுடைய தன்மை என்ற அடிப்படையிலே(பேராசிரியர்கள்) பேசினார்கள். நான் கூறுகின்றேன்; இந்தத் தமிழ்மொழி உலகளாவிய நிலையை அடைய முடியாமைக்குக் காரணம், இந்தத் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கின்றவரின் திறமையின்மைதானே ஒழிய அதனுடைய தரக்குறைவினால் அன்று. ஆங்கிலம் உலக மொழியாக வந்ததற்குக் காரணம் அந்த ஆங்கிலேயர்கள்தாமே ஒழிய அந்த மொழி காரணமில்லை. ஆங்கிலேயர்கள் தங்கள் திறமையினாலே இந்த உலகமெல்லாம் பரவினார்கள். உலகத்திலுள்ள நாடுகளையெல்லாம் கைப்பற்றினார்கள். அங்கேயெல்லாம் தங்களின் ஆட்சியைச் செலுத்தினார்கள். ஆட்சி வந்த பிறகு அந்த மொழிக்கு ஆட்சி மொழி மதிப்பு ஏற்பட்டது. அதுதான் அந்த மொழி வளர்ச்சிக்கு உண்மையான கரணியமே ஒழிய நீங்கள் நினைப்பது போல் அன்று", என்று ஒரே அடியாக அடித்துப் போட்டு விட்டார். நம்முடைய பேராசிரியர்களின் மூளைகளைப் பார்த்தீர்களா?

வரலாற்றிலே நாம் பார்க்கின்ற பொழுது 70-75 ஆண்டுக் கால வரலாற்றிலே, நான் முதலில் குறிப்பிட்டதைப் போல இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலே இந்த ஈராசு பாதிரியாரைப் போன்றவர் வந்து இந்தத் தமிழன் யார், தமிழ் நாகரிகம் என்ன, அவர்களுடைய பண்பாடு என்ன? என்றெல்லாம் நமக்குக் காட்டினார்கள். அதைத் தொடர்ந்து இரண்டு அணி இந்தியாவிலே உருவாகியது. 'சமற்கிருதத்திலிருந்துதான் தமிழ் வந்தது' என்பது ஓர் அணி. மற்றொன்று 'தமிழ் தனித்தியங்க வல்லது' என்பது. இப்படிப்பட்டவர்கள் நூல்கள் எழுதினார்கள். இப்படிப்

பட்ட நூல்களை எழுதிய அந்தப் பேராசிரியர்களிலே கூட நூற்றுக்கு 90 விழுக்காட்டினர் தமிழர்கள்தாம். ஆனால் வடமொழியைச் சார்ந்துதான் எழுதுவார்கள். ஆரியப் பார்ப்பனர்களைச் சார்ந்துதான் எழுதுவார்கள். அந்த மதத்தைச் சார்ந்துதான் எழுதுவார்கள். தமிழ் தனித்தன்மை பொருந்தியது என்று காட்டவே மாட்டார்கள். நம்முடைய மு. வ. கூட இறுதியில் அப்படித்தான் அவருடைய மொழி இலக்கிய வரலாற்றை எழுதி விட்டுப் போனார். அதே மு. வ. தொடக்கக் காலத்தில் மிக அழகாகத் தனித்தமிழ் உணர்வுகளை, தன்மைகளை இந்த இளைஞர்களிடத்திலே ஊட்டினார். அப்படிப்பட்ட மு. வ. இறுதியாகத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதுகின்றபொழுது இந்தத் தவற்றை செய்தார். என்ன காரணம்? அகாதமி (Acadamic) பரிசு வாங்குவதற்கு அவருக்கு வரையறுக்கப் பட்டது. மு. வ. அவர்களே, இந்தியத் தேசிய உணர்வுக்கு ஊறு விளைவிக்காத அளவிலே நீங்கள் அந்த நூலை எழுத வேண்டும் என்று அவருக்குக் கட்டளையிடப்பட்டது. அந்த வரையறைக்கு இணங்கி அவர் வரலாறு படைத்தார்.

எனவே அங்கே அறிஞர்களாய் இருந்தாலும் அரசிலே பணி புரிகின்ற பொழுது அந்தக் கட்டுப்பாட்டுக்குள்ளே அவர்கள் அந்த வரலாற்று நூல்களை எழுதினார்கள். உண்மையான அறிஞர்கள் அந்தக் கட்டுப்பாட்டையும் தகர்த்தெறிந்து விட்டு வெளியே வந்து, இயல்பாக உண்மையாக எழுதினார்கள். அப்படிப்பட்ட அறிஞர்களிலே நம்முடைய ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களும் ஒருவர்.

'தேவ நேயப் பாவாணர்' அவர்களின் இயற்பெயர் தேவநேசன் என்பதாகும். அவர் ஒரு கிறித்துவர். முதுகலை (M.A.) படிக்கின்ற வரையிலே அவர் ஆங்கிலமொழி ஆராய்ச்சியை எடுத்துப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்திலேதான் இருந்தார். அக்காலத்தில் 'மறைமலையடிகளாரின்' கொள்கை மாணவராக இருந்து தமிழ் கற்க வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுது தமிழ் பற்றி அவர் கூறக்கேட்ட போது... ஓகோ! இப்படிப்பட்ட மொழியா என்று அவர் வியந்தார். உணர்ந்தார். உணர்ந்த உடனே அவர் 'தமிழ் மொழி ஆராய்ச்சியை நான் எடுத்துப் படிப்பேன்' என்று ஆங்கில மொழி ஆய்வினைக் கை விட்டு விட்டுத் தமிழ்மொழி ஆய்விலே ஈடுபட்டார். கிட்டத்தட்ட 45 அல்லது 50 ஆண்டுக்காலம், இந்த ஏதுங் கெட்ட தமிழ் மொழியினை ஆராய்ந்தார். ஒரு பெரிய வரலாற்றினை உருவாக்கினார். அவற்றையெலாம் உண்மையெனச் சான்று காட்டினார். அது பெரிய செய்தி! இப்படியாக அவர் மேல்நாட்டு ஆய்வாளர்களுக்கே சூளுரைத்த ஒரு பெரிய அறிஞர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே அவருக்கு இருந்த பேராசிரியர் பொறுப்பைக் கூட அதற்கு இழுக்கு வந்தபொழுது, அப்பதவியே வேண்டாம் என்று கூறி வெளியே வந்துவிட்ட அறிஞர் அவர். எனக்குப்

பெண்டாட்டி இருக்கிறாள், பிள்ளைகள் இருக்கின்றார்கள். அத்துடன் கொஞ்சம் மானமும் இருக்கின்றது என்று சொல்லிவிட்டு வெளியே வந்தார்.

எனவே அப்படிப்பட்ட பேராசிரியரெல்லாம் தோன்றினார்கள். அப்படிப்பட்ட பேராசிரியரெல்லாம் தோன்றி நமக்கு வரலாறுகளைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். இந்த வரலாற்று உண்மைகளையெல்லாம் தமிழர்களாகிய நாம் கடைப்பிடிக்க வேண்டும். படிக்க வேண்டும். உங்களுக்குத் தெரியாம லிருக்கலாம். உங்கள் அப்பா அம்மாவிற்கும் தெரியாமலிருக்கலாம். உங்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்கூட அந்த அளவிற்குப் போயிருக்க மாட்டார்கள். நீங்கள் அந்த அளவிற்குப் போக வேண்டுமானால் தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்ற இதழ்கள்தாம் உங்களுக்கு உறுதுணை செய்யும்.

அந்தத் தென்மொழியிலே முதல் பக்கத்திலேயே உயிர்க் கொள்கையாக ஒன்றைச் சொல்கின்றார்கள். இது எல்லாருக்கும் கேட்டால் கசக்கும். ஆனால் உண்மை. நீங்கள் வரலாற்றை ஆய்வீர்களே யானால் நீங்களே அதை நன்கு புரிந்து கொள்ளலாம்.

அதில்,

மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று கட்டம் போட்டுக் கூறுகின்றார்கள்.

“இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்துமதம் இருக்கும். இந்துமதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும் வரை மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே விலகா. மதப்பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாத வரை ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும், மேலாண்மையிலிருந்தும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடியினின்றும் தமிழன் மீளாத வரை தமிழ்மொழி தூய்மை அடையாது; தமிழினம் தலைதூக்காது. தமிழ்நாடு தன்னுரிமை அடைய முடியாது, எனவே இந்து மதத்தினின்றும் மதப்பூசல்களிலிருந்தும் ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால் நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே யாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம்முடைய மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணரல் வேண்டும்.”

இது கொள்கை. இது முடியுமா? இயலுமா? என்று யாராவது அஞ்சுவீரேயானால் பின்வாங்கி விடுங்கள். இப்படி எல்லாருமே பின்வாங்கி விடுவீரேயானால் இந்தச் செயற்பாடே தேவையில்லை. நாமும் வாழ்ந்து விட்டுப் போவோம்; ஆனால்

நாம் அப்படிப் பின்வாங்க அணியமாக இல்லை. நம்முடைய உழைப்பு நம்முடைய தொண்டு ஏதோ ஓரளவாவது நமக்குப் பயன் தருமே என்ற எண்ணத்திலே நாம் இதைச் செய்கின்றோம். வெற்றி பெறுவோம் என்பது நம்முடைய நோக்கமன்று. பிறந்து விட்டோம் தமிழனுக்! வாழ்கின்றோம் தமிழனுக! உண்மை தெரிந்து விட்டது! அந்த உண்மையைப் பிறருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை என்ற காரணத்தினாலே தான் இதைச் சொல்லுகின்றோம். இதனால் துன்பங்கள் வருகின்றனவா? நாம் ஏற்றுக் கொள்ள அணியமாக இருக்கின்றோம்! நட்பு பகையாகப் போகிறதா? போகட்டும்! அதே நேரத்திலே பகை நட்பாகி வருவதையும் நாம் பார்க்கின்றோம். எனவே பகை நட்புப் பார்த்து இதை நாம் பேசவில்லை! நமக்கு மொழி, இனம், மிகவும் முகாமையானவை!

இனி, இந்த வரலாற்றை நாம் பார்க்கின்ற பொழுது 'பெரியார்' அவர்கள் இனவுணர்வை ஊட்டினார்கள். அதே போல 'மறைமலையடிகள்' மொழியுணர்வை ஊட்டினார்கள். இந்த மொழியுணர்வும் இனவுணர்வும் இந்த இக்கால மறுமலர்ச்சிக் காலத்திலே ஒன்று சேர்ந்ததே கிடையாது. கிடையவே கிடையாது!

பெரியாருக்கு மொழி பிடிக்காது. காட்டு விலங்காண்டி மொழி தமிழ் என்று சொல்லியவர் அவர். எனவே அவருக்கு மொழி மீது பற்றில்லை. ஆனால் அவருக்கு நிறைந்த இனவுணர்வு இருக்கின்றது. ஆரியப் பார்ப்பனர்களிடமிருந்து 'திராவிடர்களை' விடுவித்தே யாதல் வேண்டும் என்ற இனவுணர்வு அவருக்கு நிறைந்தே இருந்தது.

மறைமலையடிகளுக்கு மொழி உணர்வு உண்டு. அதே நேரத்தில் அவருக்கு இனவுணர்வும் உண்டு. ஆனால் மறைமலையடிகளிடத்தில் இருந்த மொழி உணர்வு, திராவிடர் கழகத்தில் பெரியாருக்கிருந்த இறை மறுப்புக் கொள்கையினை ஏற்றுக் கொள்ளவில்லை. இது மறைமலையடிகளுக்குப் பிடிக்காது. இதனால் பெரியாரும் மறைமலையடிகளும் ஒன்று சேர முடியாமற் போயிற்று. எனவே மொழியும் இனமும் ஒன்று சேர முடியாது போனதை இந்த வரலாற்றிலே நாம் கண்டோம். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால்... பெரியாரை மறைமலையடிகளுக்கு ஏன் பிடிக்காது என்று கேட்டால்,... அவர் கடவுள் இல்லை என்று சொல்கின்ற ஆள். அதுதான் பிடிக்கவில்லை. ஆனால் இனவுணர்வை அவருக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் மறைமலையடிகளைப் பெரியாருக்கு ஏன் பிடிக்காது என்று கேட்டால்... இந்த மொழியைப் பற்றிப் பெரியாருக்கு அக்கறையில்லை. ''தமிழ் இனம் எழுந்து விட்டால் மட்டும் போதும்; அதைப்பற்றிக் கவலையில்லை. மொழியாக எதை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்'' என்று சொன்னவர்தாம் அவர். ஒரு காலத்தில்

பெரியாரவர்கள் சொன்னார்கள் ''தமிழ் மொழியே தேவை யில்லை. ஆங்கிலத்தை நாமெல்லாம் தாய்மொழியாக எடுத்துக் கொள்ளலாம்'' என்று. அவருடைய மும்முரமான சொற்பரப்பு தனிலே(பிரச்சாரத்திலே) அவர் அப்படிச் சொன்னதினால் 'நம் முடைய' மொழிக்கு இரண்டகம் செய்ததாக நான் சொல்ல வர வில்லை. அவர் தமிழ் மொழியைப் பாராட்டியும் எழுதியிருக்கின் றார். ஓரிடத்திலே, தமிழன் தன்னுடைய மொழியைத் தூய்மை யாக எழுத வேண்டும், பேச வேண்டும். அப்பொழுதுதான், அவன் சரியான தமிழன். இல்லை என்றால் அவன் சரியான தமிழனே இல்லை என்று கூடப் பேசி இருக்கின்றார். அவருடைய விரைவிலே, அவருடைய காலத்திலே அந்தந்த சமையத்தில் அப்படிப் பேசி இருக்கின்றார்.

எனவே எப்படிப் பார்த்தாலும் அவருக்குப் பின்னாலே தோன் றிய திராவிட இயக்கத் தோழர்களும் இந்த மறைமலையடிகள் இயக்கத்திலே தோன்றிய தனித்தமிழ் நெறியாளர்களும், ஒன்று பட முடியாது போனமைக்குக் காரணம் இந்த இறைமறுப்புக் கொள்கைதான். இதுதான் இந்த இன உணர்வையும் மொழி உணர்வையும் ஒன்று சேர்க்காமல் இருந்தது.

நீங்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். உயிரில்லா மல் உடலில்லை.... உடலில்லாமல் உயிரில்லை. ஒரு முகத்திற்கு இரண்டு கண்கள். இனமென்றால் கண்டிப்பாக அதற்கு மொழி இருந்தாதல் வேண்டும். மொழியும் இனமும் வேறு வேறாக இருந்தால் அந்த இனம் உருப்படவே உருப்படாது! உடல் இனம் என்றால் மொழி அந்த உடலுக்கு ஆற்றல் தருகின்ற குருதியைப் போன்றது. அ'தாவது அரத்தத்தைப் போன்றது. அந்த அரத் தத்தில் 'சோகை' பிடித்து விட்டால் உடம்பு எவ்வளவுதான் பருத்திருந்தாலும் என்ன செய்வது? பயனில்லை. எனவே அந்தக் குருதி தூய்மையானதாக இருக்க வேண்டும். அந்தக் குருதியைத் தூய்மைப் படுத்த வேண்டும். அந்தக் குருதியில்தான் சமசுக் கிருதம் என்ற புற்று நோய் புகுந்து விட்டதே! அந்த சமசுக் கிருதம் என்ற புற்று நோயணுக்கள்(கிருமி)கள் இருக்கின் றனவே! ஆங்காங்கே புற்று நோய்களை உண்டாக்கிக் கொண் டிருக்கின்றனவே!

எனவே அந்தக் குருதியைத் தூய்மை படுத்த வேண்டும். உடலை மட்டும் துப்புரவுப் படுத்த, கழுவி விட்டால் மட்டும் போதாது. குருதியைத் தூய்மைப் படுத்த வேண்டும். அந்த அடிப்படையிலே இன உணர்வு உடையவர்கள்... அ'தாவது உடலைப் பேணுகின்றவர்கள் குருதியாகிய அந்த மொழியைத் தூய்மையாக வைத்திருப்பதற்கு முன்வர வேண்டும். ஆனால் அங்கே அது நடைபெறவில்லை. இந்த மொழியைத் தூய்மைப் படுத்த விருக்கின்றவர்கள், உடலை அ'தாவது இனத்தை தூய் மைப் படுத்தவும் விரும்ப வேண்டும். ஆனால் இந்த உடல்

ஒற்றைக்கண் அறிவாளிகள்!

ஒவ்வொரு துறையிலும் அறிவாளிகள் மிகுந்து போனது இன்றைக்கு ஏற்பட்டுள்ள மிகப் பெரிய குழப்பங்களுள் ஒன்றாகும்.

ஒவ்வொரு துறையிலும் இன்று வளர்ந்துள்ள 'ஒற்றைக்கண் அறிவாளிகளின்' திறமைகளுக்கு முன் மாந்தன் பொம்மையாகிப் போனான்.

இயல்பியலில்(பூதவியலில்) வல்லமை பெற்று விட்ட வல்லுநர் ஒருவர் இருந்தால் அவர் உலகச் சிக்கல்கள் அனைத்தையும் இயல்பியலில் தீர்த்துவிடலாம் எனப் பரிந்துரைக்கின்றார். மனத்தைப்பற்றிய ஆராய்ச்சியில் மூழ்கிவிட்ட ஒரு மனவியல் அறிஞர் தாம் மேற்கொண்ட ஆராய்ச்சிகள், பட்டறிவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு வாழ்க்கை மெய்ம்மத்தையே உருவாக்கிட முனைகிறார். ஒருவருடைய அறிவு பாலியலில் மட்டுமே தோய்த்து எடுக்கப்பட்டதாக இருந்தால், அவர் மாந்த வாழ்க்கை என்பது காமம் என்ற அச்சில் நின்று சுழல்வதுதான் என முற்ற முடிவாக அறிவித்து விடுகின்றார். இந்த இயல் முரணான ஆராய்ச்சியில் அவர் எந்த அளவிற்குப் போய்விடுகின்றார் என்றால், இறைவன் என்ற எண்ணமே 'காமம்' என்ற இந்த வாயில் வழியாகத்தான் மாந்த மனங்களில் புகுந்தது என வழக்காடுகின்றார். அதேபோல் பொருளியல் துறையில் தம்மை முழுமையாக ஆழ்த்தி விடுகின்ற ஒருவர் மாந்த வாழ்வில் சிக்கல் என்பதே பொருளியல் சிக்கல்தான். மாந்தன் எதிர் கொள்ளும் ஏனைய சிக்கல்கள் எல்லாம் இந்தப் பொருளியல் சிக்கலின் கிளைகள் தாம் என்று எல்லோரையும் நம்ப வைக்க முயல்கின்றார்.

உண்மையில் (உரிய தீர்வு கிடைக்க வேண்டுமானால்) இந்தச் சிக்கல்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாகவே ஆராய்ந்திட வேண்டும். ஒவ்வொரு தனிச் சிக்கலையும் இந்த மொத்தச் சிக்கல்களின் தொகுப்பில் ஒரு பிரிவு என்னும் அடிப்படையில்தான் அணுக வேண்டும். இந்த முழுச் சிக்கலின் பிரிவு என்னும் அடிப்படையிலேதான் ஒவ்வொரு தனிச் சிக்கலும் தனக்குரிய முகாமையைப் பெறுகின்றன.

மாந்தனுக்கு ஒரு பூத உடல் இருக்கின்றது. அவனது உடல் பூதவியல் நெறிகளுக்குக் கட்டுப்பட்டதுதான். இந்த அடிப்படையில் பார்த்திடும்போது மாந்தன் பூதவியல் நெறிகளின்

(முன் பக்கத் தொடர்ச்சி)

வேறோர் இன்பத்திற்காக அடிமைப்பட்டுக் கிடக்கின்றதை நாம் பார்க்கின்றோம். அந்த இன்பத்தை இழக்க இந்த உடலுக்கு முடியவில்லை. எனவே அதைத் தூய்மைப் படுத்த வேண்டும். ஆகவே இனமும் மொழியும் ஒன்றாகுமானால் தமிழர்களின் எழுச்சி, கண்டிப்பாக உண்டு. உறுதியாகக் கொண்ட நோக்கத்தை அஃது அடைந்தே தீரும்!

(தொடரும்).

தொகுப்பால் ஆனவன் என எண்ணத் தோன்றும். உண்மையில் அவன் சதையாலான ஒரு பிண்டம் மட்டுமல்லன். அவனுடைய சிக்கல்கள் அனைத்தையும் பூதவியல் நெறிகளை மட்டுமே கொண்டு தீர்த்து விடமுடியாது. மாந்தன் உயிரைக் கொண்ட ஓர் உயிரினம். இதனால் அவன் உயிரியல் நெறிகளுக்கும் உட்பட்டவன். இந்தக் கோணத்திலிருந்து பார்த்திடும்போது அவன் உயிர் அறிவியல் நெறிகளின் தொகுப்பே என்று நம்பிடத் தோன்றும். இதற்காக மாந்தனை வெறும் ஓர் உயிரி(பிராணி) என்று எடுத்துக் கொண்டு அவனது வாழ்க்கையை நெறிப்படுத்துகின்ற எல்லா நெறிகளையும் உயிரியல் அறிவியலிலிருந்தே கொடுத்து விடமுடியாது. மாந்தன் தன்னுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றின் தேவையை உடையவனாய் இருக்கின்றான்.

இந்த அடிப்படையில் பொருளியல் அவனுடைய வாழ்க்கையில் பிரிக்க முடியாததோர் இடத்தைப் பெறுகின்றது என்பது உண்மையே! அதற்காக அவன் உண்டு, உடுத்தி உறங்கி முடங்கிட ஓர் இடத்தைத் தேடிடும் ஒரு பொருளியல் விலங்குதான் என்ற அடிப்படையில் அவனுடைய வாழ்க்கை முழுவதையும் பொருளியல் நெறிகளைக் கொண்டே முறைப்படுத்தி விடலாம் என முடிவு கட்டுவது சரியான செயலாகாது.

மாந்தன் தன்னுடைய இனத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இனப்பெருக்கம் செய்தாக வேண்டும். இதனால் வலிவானதொரு காம உணர்வு அவனுள் அமிழ்ந்து கிடக்கக் காணுகின்றோம். இந்த அடிப்படையில் அவன் இனப்பெருக்கம் செய்து கொண்டிருக்கும் ஓர் இயந்திரந்தான். ஆகவே அவன் காமம் என்ற கண்ணாடியில் மட்டுமே பார்த்திட வேண்டிய ஓர் உயிரினம் எனக் கூறுவது நயன்மையாகாது. மாந்தனுக்கென்றொரு மனம் இருக்கின்றது. அறிவை உள்வாங்கும் ஆற்றல் அதற்கிருக்கின்றது. ஆசைகள், உணர்வுகள் ஆகியவற்றின் உறைவிடமாக அஃது இருக்கின்றது.

இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் மனவியலுக்கு அவனுடைய வாழ்க்கை ஓட்டத்தில் ஒரு தலையாய இடமிருப்பதை நம்மால் உணர முடிகின்றது. அதற்காக மன இயலை மட்டுமே கொண்டு வாழ்க்கை நெறிகள் அனைத்தையும் யாத்திட முனைவது முறையன்று. அவன் மனத்தால் மட்டும் வாழும் மாயப்பிறவியல்லன். மாந்தன் குமுகாயம் என்ற கூட்டமைப்பில் கலந்து வாழ்ந்திட வேண்டிய கட்டாயத்திற்குட்பட்ட ஓர் உயிரினம்; இதனால் அவனுடைய வாழ்க்கையின் பல பகுதிகள் குமுகாய இயலின் வரையறைக்குட்பட்டனவாக இருக்கின்றன.

இந்தக் குமுகாயப் பிணைப்பு அவனுடைய வாழ்க்கையின் பல்வேறு தனித்தன்மைகளுள் ஒன்றுதான். இதனை வைத்துக்

கொண்டு அவனுடைய வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வழி-காட்டுதல்களையும் வரைந்திட குமுகாய இயலை மட்டுமே சார்ந்து இருந்திட இயலாது. மாந்தன் அறிவார்ந்த ஓர் உயிரினம். அவனுடைய வாழ்க்கையில் அவனது அறிவின் தாகங்களைத் தணித்திட வேண்டியதும் முகாமையான ஒன்றாகும். இந்த அடிப்படையில் காரண கருமங்களை விளக்கும் அறிவியல் அவனுடைய முகாமைத் தேவைகளுள் ஒன்றை நிறைவு செய்கின்றது. எனினும் அவன் அறிவால் மட்டுமே, அறிவின் நிறைவை மட்டுமே கொண்டு வாழ்ந்திருப்பவனல்லன். இந்த அறிவியல்களால் மட்டுமே அவனது வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வழிகாட்டுதல்களையும், வழங்கிட முடியாது. மாந்தன் ஒழுக்கம், ஆதனியம்(ஆன்மீகம்) ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்பவன்.

நல்லனவற்றையும் தீயனவற்றையும் பிரித்தறிந்திடுபவன். காரண - கருமிய வழக்குகளுக்கு அப்பாற் சென்று உண்மையை (யதார்த்தத்தை) அறிந்திட முனைபவன். இந்த அடிப்படையில் ஒழுக்க நெறிமுறைகளும் ஆதனியலும் மாந்தனின் முகாமையான தேட்டங்களை நிறைவு செய்கின்றன. ஆனால் அவன் அடி முதல் முடிவரை ஆதனியம், ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே வாழ்பவனல்லன். ஆகவே அவனது வாழ்க்கை முழுவதையும் இந்த இரண்டு இயல்களையும் மட்டுமே கொண்டு வழிநடத்திட முடியாது.

உண்மையைச் சொல்வதானால் இவை அனைத்தையும் ஒன்றாய்க் கொண்டவன் மாந்தன். இவற்றிற்கெல்லாம் மேலாக மாந்தன், இத்தனையையும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தாலும் அவன் இந்தப் புடவியின (பிரபஞ்சத்தின்) மிக முகாமையானதொரு பகுதி. இது மாந்தனைப் பற்றிக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய மிக முகாமையானதொரு செய்தியாகும். இதனை நாம் மறந்துவிடலாகாது. இந்த அடிப்படையில் பார்த்திடும் போது, அவன் அந்தப் புடவியில் எத்தகையதொரு பங்கினைப் பெறுகின்றான்?

இந்தப் புடவியின் ஒரு பகுதி என்ற அடிப்படையில் அவன் எப்படிச் செயல்பட வேண்டும்? என்பவை மிகவும் முகாமையானவையாகும். ஏனெனில் அவன் இந்த உலகில் எத்தகையதொரு பங்கினைப் பெறுகின்றான் என்பதை மிகவும் துல்லியமாகத் தெரிந்து கொண்டாலன்றி அவனுடைய வாழ்க்கையை வழி நடத்திச் செல்லுகின்ற ஒரு முழுமையான நிறைவான வாழ்க்கைத் திட்டத்தை வகுத்திட இயலாது. அதேபோல் ஒரு மாந்தன் தான் எந்தெந்த இலக்குகளுக்காக-நோக்கங்களுக்காக இந்த உலகில் பணியாற்றிட வேண்டும் என்பதையும் உறுதி செய்தாக வேண்டும்.

அப்படி அவன் எந்த நோக்கங்களுக்காக வாழ்கின்றானோ அந்த நோக்கங்கள் அவன் இந்த உலகில் பெறுகின்ற உயர்ந்த

இடத்திற்கும் கண்ணியத்திற்கும் உகந்ததுதான என்பதையும் தீர்மானித்தாக வேண்டும். இந்தக் கடைசி இரண்டு செய்திகளும் மாந்த வாழ்வுக்கு மிகவும் முகாமையான அடிப்படைகளாகும். இந்த அடிப்படைகளை அடியாகக் கொண்டுதான் வாழ்வின் பிற வழிகாட்டுதல்களெல்லாம் வகுக்கப் படுகின்றன.

இப்போது ஒன்று தெளிவாக விளங்கும். அஃதாவது நீங்கள் ஒரு சிக்கலைத் தெளிவாகப் புரிந்துகொள்ள விரும்பினால், உங்களுடைய கவனம் முழுவதையும் அந்தச் சிக்கலில் மட்டுமே செலுத்துவது தவறாகும். அதேபோல் அந்தச் சிக்கல் எந்தத் துறையோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையதோ அந்தத் துறைக்குச் சார்பாக ஒரு விருப்பு வெறுப்பை மனத்திலே வளர்த்துக் கொண்டு அந்தச் சிக்கலை அணுகுவதும் தவறாகும். மாறாக நீங்கள் ஒரு சிக்கலை சரியாகப் புரிந்துகொள்ள அந்தச் சிக்கலை (வாழ்வின்) பிற சிக்கல்களோடு எந்த அளவிற்குத் தொடர்புடையது என்பதையும் (வாழ்க்கை என்ற) முழுச் சிக்கலில் அது பெறும் இடம் என்ன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பிறகு எந்த விருப்பு வெறுப்புமின்றி அந்தச் சிக்கலை ஆராய்ந்திட வேண்டும்.

அதேபோல் வாழ்க்கையின் நிலையான ஓட்டத்தில்-அதன் சம நிலையில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால், அந்தத் தவற்றை நீங்கள் சரி செய்து கொள்ள விரும்பினால், வாழ்க்கையின் ஏதாவது ஒரு சிக்கலை மட்டும் எடுத்துக் கொண்டு அது மட்டுந்தான் வாழ்வின் ஒரே சிக்கல் என்னும் அடிப்படையில், முழுவாழ்க்கையையும் அந்தச் சிக்கலைச் சுற்றியே சுழலவிட்டு விடாதீர்கள். இது மிகப்பெரியதொரு தவறாகும். இந்தத் தவற்றை நீங்கள் செய்தால் வாழ்க்கையின் நிலையான ஓட்டத்தை-அதன் சம நிலையை நீங்கள் மீண்டும் ஒரு முறை குலைத்து விடுவீர்கள்.

வாழ்க்கையை சீரமைத்துக் கொள்வதற்குச் சரியான வழி, முழுவாழ்க்கையையும், அதன் அடிப்படை உண்மைகள் முதல் அதன் கிளைகளின் நுணுக்கமான பகுதிகள் வரை எந்த விருப்பு வெறுப்புமற்ற மன நிலையோடு ஆராய்வதுதான். விருப்பு வெறுப்பற்ற மனத்தோடு வாழ்க்கையை ஒட்டுமொத்தமாகச் சீர்தூக்கிப் பார்த்துத் தவறு எங்கே நடந்திருக்கின்றது என்பதையும் அந்தத் தவற்றின் உண்மையான இயல்புகள் என்னென்ன என்பதையும் கண்டுபிடித்திட வேண்டும். அதன் பிறகு தீர்வுகளைத் தேடிட வேண்டும். இதுவே சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சரியான அணுகுமுறையாகும்.

மாந்தன் பொருளியல் சிக்கலைச் சரியாகப் புரிந்து கொள்வதிலும், அதற்கு உரிய தீர்வைக் காண்பதிலும் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கான காரணமும் இதுதான். அஃதாவது சிலர் பொருளியல் சிக்கலை வெறும் பொருளியல் அடிப்படையில் மட்டுமே பார்க்கின்

றனர். இன்னும் சிலரோ அதன் முகாமையை மிகைப்படுத்தி அதுதான் வாழ்க்கையின் ஒரே சிக்கல் என வெளிப்படுத்தி விடுகின்றனர். இன்னும் சிலரோ பொருளியலை அடிப்படையாகக் கொண்டு ஒரு முழு வாழ்க்கை மெய்ம்மையையே வகுத்து விடுகின்றனர். அஃதோடு ஒழுக்கம், கலை, பண்பாடு ஆகிய வாழ்வின் எல்லாத் துறைகளையும் இந்தப் பொருளியலை அடிப்படையாகக் கொண்டே அமைத்துவிட விழைகின்றனர்.

இப்படிச் செய்வதன் மூலம் இவர்கள் மாந்தனின் வாழ்க்கையைப் புல்வெளியில் புற்களை மேய்த்துவர அவிழ்த்து விடப்பட்ட ஆடுமாடுகளின் வாழ்க்கைக்கு ஒப்பாகத் தாழ்த்தி விட்டனர். ஏனெனில் பணமும், பொருளும் மட்டுமே மாந்த வாழ்வின் அடிப்படையாக அமைந்திடும் என்றால் பின்னர் மாந்த வாழ்வின் நோக்கம் உண்டு, கொழுத்துத் தங்களைப் பருமனாக்கிக் கொள்வதை மட்டுமே இலக்காகக் கொண்ட ஆடுமாடுகளின் இயல்பைவிட எந்த வகையிலும் உயர்ந்ததன்று என்றாகிவிடும். இதே போல் ஒழுக்கம், ஆதனியம், அறிவியல் குமுகாய அமைப்பு, மனவியல் இன்னும் இவைபோன்ற எல்லாத்துறைகளிலேயும் பணம் பண்ணும் பொருளியல் நோக்கமே தலையானதாக அமையுமேயானால் வாழ்க்கையே நிலைகுலைந்து போகும்.

இந்தத் துறைகளில் பொருளியல் துறைக்கு எந்த வேலையும் இல்லை. இந்தத் துறைகளிலேயும் பொருளியலைப் புகுத்திப் பணம் பண்ணும் நோக்கத்தைக் கற்பிப்போமேயானால் அது மாந்தனை வெறும் தன்னலக்காரனாகவே மாற்றிவிடும். பொருளியல் நோக்கங்களை நுழைத்தால் அ'து ஒழுக்கத்துறையையும் ஆதனியத் துறையையும் தன்னலம், உலக ஊதியம் என்ற கீழான நோக்கங்களை நோக்கி இழுத்துச் சென்றுவிடும். அறிவியலை வெறும் சமையலறை ஆராய்ச்சி இயல் என்னும் அளவிற்குத் தாழ்த்திவிடும்.

மாந்தனின் குமுகாயத் தொடர்புகளை ஊதியம் சம்பாதிக்கும் வணிக நோக்கமாக மாற்றிவிடும். மாந்தன் ஒரு பொருளியல் விலங்கு என்ற அடிப்படையில் மாந்தனை ஆராய்ந்தறியும் ஒரு கலையாக மனவியலை ஆக்கிவிடும். இப்படி மாந்தனைப் பணம்-பணம்-என அலையவிடும் ஓர் அணுகுமுறையை வாழ்வின் அடிப்படையாக ஆக்குவதைவிட, மாந்த இனத்திற்கு இழைக்கப்படும் மிகப் பெரிய கொடுமை வேறெதுவும் இருக்க முடியுமா?

(1941-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20-ஆம் நாள் மௌலானா மௌதூதி அவர்கள் அலிகர் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையிலிருந்து.) தொகுப்பு : எம். சி. எம்.

- நன்றி - 'சமரசம்' சன' 87.

நாடகம் : [தொடர்-15]

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்.)

காட்சி கசு.

உறுப்பினர்கள் : 1. வள்ளி,
2. மருக்கொழுந்து (ஒரு பெண்).

இடம் : வள்ளி வாழ் குடில்.

நிலை : (தன்னை ஒப்பனை செய்து கொண்டு சிங்கனை நினைத்துப் பாடுகிறாள்).

பாட்டு

வள்ளி : பழக்குலை அங்கும் பைங்கிளி இங்கும்
குழலிசை அங்கும் கொள்செவி இங்கும்
விரிசுனை அங்கும் விடாய்ப்பெண் இங்கும்
சொரிதேன் அங்கும் சுவைப்பவள் இங்கும்
பொறிவண்டு அங்கும் பொதிமலர் இங்கும்
உறித்தயிர் அங்கும் உண்பவள் இங்கும்
காட்சிகள் அங்கும் கட்பொறி இங்கும்
பாற்சோறு அங்கும் பசித்தவள் இங்கும்

மருக்கொழுந்து : (பின் பக்கமாய் வந்து) நன்று, நன்று; பாட்டு நன்று.

வள்ளி : (திரும்பிப் பார்த்து, சிறுசினத்துடன்) யார் நீ? என்ன வேண்டும்?

மரு : (மென்றுகில் உடுத்தி நெற்றி சுருங்கிப் பேசாது நிற்கிறாள்).

வள் : என்ன பேசாமல் நிற்கிறாய்? உன்னைத்தான். யாரென்றேன்?

மரு : சொல்லுகிறேன். வள்ளி என்பவள் நீதானே?

வள் : ஆமாம்; நான்தான்; உன் பெயர்?

மரு : என் பெயர், மருக்கொழுந்து. உன் உள்ளத்தைக் கள வாடிய சிங்கன் இருக்கும் வீட்டிற்குப் பக்கத்து வீடு எனக்கு.

வள் : (வியப்போடு) அப்படியா!? அது சரி, இப்போது என்னைத் தேடி ஏன் வந்தாய்? உனக்கு எதுவும் வேண்டுமோ?

மரு : வேண்டாம்.

வள் : ஒன்றும் வேண்டாம் என்றால், என்னைத் தேடி ஏன் வந்து நிற்கிறாய்? ஆமாம், என் பெயர் உனக்கெப்படித் தெரிந்தது?

மரு : உன் காதலன் சிங்கன் சொல்லத் தெரியும். நேற்று உன் கெண்டை விழி அழகைப் பற்றிச் சொன்னார்.

வள் : அப்படியா! (ஓடிச் சென்று ஓலைப்பாய் ஒன்றை எடுத்து விரித்து) மருக்கொழுந்து பாயில் உட்கார். என்ன சொன்னார்?

மரு : அடேயப்பா! அந்தச் சொற்களையெல்லாம் ..

வள் : (சட்டென்று இடைமறித்து) மருக்கொழுந்து, ஆண்கள் பெண்களைப் பற்றிப் பேசுவது இயல்புதான்; வேறு என்ன சொன்னார்?

மரு : நேற்றைய மன்றில் கருப்பனன் சொன்ன பொய்ப் பழியையும், கருப்பனனின் இழிபோக்குகளையும்; உன் காதலன் சொல்ல நான் கேட்டேன்.

வள் : கேட்டாயா?

மரு : கேட்டேன்; கேட்டேன். அந்த சாம்பல் வண்ணக் கருப்பனனின் வெங்கொடுமைச் செயலையும், இப்போது கொலையை மறைக்க அவன் பேசும் பொய்யுரைகளையும் கேட்டு வருந்தினேன். வள்ளி; அதைப் பற்றிக் கவலைப்படாதே; முறையற்ற செயல் என்றும் நிலைக்காது.

வள் : ஞாயம் என்று ஒன்று இருந்தாலும், என்னைப் போன்ற ஏழைகளுக்கு அது வெகு தொலைவில் அன்றோ உள்ளது.

மரு : நீள நீளத் தெரியும் மெய்யும் பொய்யும். விடு கவலையை; வள்ளி நான் ஒரு வரலாற்றைக் கூறவே உன்னிடம் வந்தேன். கேட்கிறாயா?

வள் : எத்தனை வரலாற்றைத்தான் கேட்பது. கேட்ட வரலாறு யாவும் உனக்கும் எனக்கும் என்ன செய்தது? ஒன்றுஞ் செய்யவில்லை.

மரு : ஒரு பெண்ணுடையது; நம் பெண்ணினத்தினுடையது தான்.

வள் : நம்முடைய வரலாறு எல்லாம், கருப்பனனுக்குச் சுவைக்குந் தேன். சரி, சரி அந்த வரலாற்றையுஞ் சொல்.

மரு : இந்த ஊரில் ஓர் ஓலைக்குடில். அதில் கணவன் ஒருவனும் மனைவியும் வாழ்ந்தனர். அவர்களுக்குச் செல்வங்கள் யாவும் அவர்கள் பெற்ற பிள்ளைகளே. அந்தக் கணவன் வேலைக்குப் போவார். வரும் போது கை பிசைந்து சாம்பி நிற்பது வழக்கமானது.

வள் : ஏன்?

மரு : வேலை கிடைத்தால் அவர் பணத்தோடு வருவார். அல்லவென்றால் கை பிசைந்து கவலை கொள்வார். பெருமூச்சும் விடுவார்.

வள் : யாருடைய வரலாற்றைப் பேசப் போகிறாய்?

மரு : நுரை பொங்கும் கள்ளைக் குடித்துவிட்டுக் கோவைப் பழக் கண்ணுடு, முறுக்கிய மீசையோடு, காமவெறியில் அலையும் காளையன், கொழுத்த காளை, கட்டுப்படுமா? அதைப் போல நல்ல கொழுப்பேறி காளையைப் போல கட்டுப்படாமல், காலை முதல் மாலை வரை கன்னிப் பெண்களைத் தேடி யலைவான். இந்த ஊர் கயவன் கருப்பனன். அவன் வரலாற்றைத் தான் கூறப் போகிறேன்.

வள் : அவன் வரலாறு பீர்க்கங்கொடி போலத்தான் படர்ந்து கிடக்கிறது. எந்தப் பக்கம் திரும்பினலும் அவன் வரலாறு தான்.

மரு : ஆமாம்; அப்படித்தான்; வள்ளி, அவன் சேலை கட்டிய பெண்களைத் தேடித் தேடி அலைவதுதான் அவனுடைய முழு நேர வேலை.

வள் : இந்த ஊரார் அவனை அடக்குவதும் இல்லையே.

மரு : ஊரையே அவன் அடக்கி விட்டான். பின் அவனை அடக்க யார் முன் வருவார்?

வள் : நீ சொல்வது வாய்மைதான். சரி, வரலாற்றைச் சொல்;

மரு : நான் சொன்னேனே, அந்த ஓலைக் குடில் கணவருடைய மனைவிக்கு உடலில் நோய் பேசக்கூட முடியாது; இருமல், அவர்களுக்கு வரும் செல்வமெல்லாம் வறுமைதான்.

வள் : ச்சோ. ச்சோ! அப்புறம்.

மரு : பால்குடிக்கும் பிள்ளை ஒன்று; அவள் மார்பைப் பிடித்துக் கொண்டு தாய் முகத்தைப் பார்தது ஏங்கும். ஒரு பிள்ளை கத்தும், கஞ்சியென்று. இன்னென்று உருளும் உண்ணச் சோறு கேட்டு; அவளோ தன்னுணவைப் பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டுத் தண்ணீரைக் குடிப்பாள். அதுதான் அவளுக்குச் சார உணவு.

வள் : அநதக் குடும்பத்தில் உழைப்பதற்கு வேறு யாரும் இல்லையோ?

மரு : உண்டு. அந்தத் தலைவிக்குத் தங்கை ஒருத்தி மண அகவை உடைய அழகு மிகுந்த பெண் இருந்தாள். அவளுடைய கடைக்கண் எப்போது நம் மீது பாயும் என இளைஞர்கள் பலர் ஏங்கித் திரிந்தனர். ஆனல் அவளோ வறுமையிலும் செம்மையாக வாழ எண்ணியவள். வறுமை என்பதற்காக யாரிடமும் பல்லைக் காட்டியது கிடையாது. உழைத்துப் பிழைக்கவே காத்திருந்தாள்.

வள் : இம்.

மரு : ஊரில் தினைக்கதிர் அறுவடை நடந்தது. அறுவடைக்குப் பெண்கள் பலர் தேவைப் பட்டனர். அவள் அக்காளிடம் ஒரு பெண் வந்து, அக்கா உன்னுடைய வறுமை நிலையை நான் கண்டு கண்டு இரங்குவேன். இப்போது ஊரில் தினைக் கதிர் அறுவடை, நிறைய பெண்கள் அறுவடைக்காகப்

போகிறார்கள். ஊதியமாகத் தினையே கிடைக்கும். உன் தங்கையை அனுப்பு. நீ எதற்கும் அஞ்ச வேண்டாம்; நானும் போகிறேன். அவளுக்குத் துணையாக இருந்து இருவரும் போய் வருகிறோம் என்றாள்.

வள் : போக வேண்டியது தானே.

மரு : அவளுக்குப் போக ஆவல் தான். அவள் அக்காளும் ஒப்பினாள். அவள் போனபின் ஒரு கோணல் கொண்டைக் காரி வந்தாள்.

வள் : இம் சரி.

மரு : வந்தவள், அவள் அக்காளிடம்; உன் தங்கையைத் தினைக்கதிர் அறுவடைக்கா அனுப்பப் போகிறாய்? வேண் டாம். நான் சொல்லுவதைக் கேள். அறுவடைப் பணி நாள்தோறும் கிடைக்காது. இன்றைக்கு வேலை கிடைத்தால் இன்றைய நாள் கழியும். நாளைக்கு என்ன செய்வாய்? அதனால் நான் ஒரு வழியைக் கூறட்டுமா? என்று அந்தக் குடும்பத்தில் கவலை உடையவள் போலக் காட்டிக் கொண்டாள்.

வள் : அவள் சொல்வதும் சரியாகத் தான் தெரிகிறது. அந்தக் கோணல் கொண்டைக்காரி என்ன வழியைச் சொன்னாளோ?

மரு : சொல்லுகிறேன் கேள். ஒரு செலவமிகுந்த நல்லகுண முடையவர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வீட்டில் வீட்டு வேலைசகு ஒரு பெண் வேண்டும். அந்த வீட்டில் காலையில் எழுந்தவுடன் திண்ணையைப் பெருக்கித் தெருவில் கோலம் போட்டு. வீட்டில் தேனீரோடு உணவும் அணியமாக்கிப் பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கும் வீட்டில் உள்ளோருக்கும் கொடுக்க வேண்டும். உன் தங்கைககுப் ஒருவேளை உணவு உண்டு. மிச்சமிருந்தால் வீட்டிற்கும் எடுதது வரலாம் என இனிமையாகச் சொன்னாள்.

வள் : இம்; பிறகு?

மரு : பிறகு மாலையிலும் வேலையுண்டு அந்த வீடு போய் எச்சில் ஏனங்களை (பாத்திரங்கள்) விளக்கி எடுத்து மாலையுணவும் அணியஞ் செய்ய வேண்டும். அந்த வீட்டில் உள்ளவர்கள் உண்டபின் உன் தங்கை வீடு திரும்ப வேண்டும் என்றாள்.

வள் : அதுசரி அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு என்ன வேலையோ?

மரு : அவர் ஒரு நிலக்கிழார். அதனால் அவர்கள் ஏன் வேலை செய்ய வேண்டும்?

வள் : உழைக்க ஒருவர். உண்டு களிக்க இன்னொருவர். இந்த நாட்டின் வாழ்க்கை முறை இப்படித் தானிருக்கும். அதுசரி அவளுக்கு ஊதியம்?

மரு : ஒருவேளை உணவும்; ஒரு திங்களுக்கு முப்பது உருபாயும்; என்று சொன்னாள். (தொடரும்)

வாய்ப்பில் உள்ளவர்கள் மட்டும்(இரக்கப்பட்டு) வாங்குகின்ற இதழ்களாக இருக்கின்றன. இதழில் என் பெயரும் வரவேண்டும் என்பதற்காக 'நாலுவரி' பாராட்டி எழுதி விடலாம். அதனால் பயனில்லை. 'தென்மொழியில' 'நமக்கு வந்தவை' அட்டைப் பக்க மடல்கள் தேவையற்றவை. பாராட்டி வந்தாலும் - மாறுபட்டு வந்தாலும் இதழில் வெளியிட வேண்டாம். பாராட்டுகின்றவர்கள் செயலில் காண்பிக்கட்டும். பாராட்டு மடல்கள் பல போலித்தனமானவை என்பதைத் தாங்கள் உணரவேண்டும். படைப்பாற்றல் உள்ளவர்களை இணைத்து இதழ்களைப் பலரும் விரும்பிப் படிக்கும் வகையில் வெளியிட வேண்டுகிறேன். எல்லா வேலைகளையும் தாங்களே கவனிக்க வேண்டும் என்ற நிலை மாற வேண்டும். பிற இதழ்களில் விளம்பரம் செய்யுங்கள். தொடர்ந்து செய்தால் பயனளிக்கும்- தாங்கள் அறியாத செய்திகள் இல்லை. பல ஆண்டுகளாகத் தங்கள் எண்ணங்களோடு கொண்ட தொடர்பினால் எழுதினேன். தங்கள் கருத்துகளை - தூய தமிழ் வளர்ச்சிக்காக என்றும் எடுத்துரைப்பேன்.

தங்கள் அன்புள்ள,

- இர. அரங்கநாதன், காரை. (திருச்சி மா.வ.)

○: *1199:* பெருமதிப்பிற்கும் அன்பிற்குமுரிய ஐயா, வணக்கம். நலமே நிறைக. கருத்தரங்கில் தங்களைக் கண்ணுற்றபோது தாங்கள் உடல் நலம் குன்றியிருப்பதை அறிந்து மனம் மெலிந்தேன். தங்களுக்கு எக்காலத்திலும் எவ்வொரு சமயத்திலும் மனவலிமை சிறிதும் குன்றாது என்பதை நன்கறிவேன். ஆயினும் பணியழுத்தங்களாலும், ஓய்வின்மையாலும் உடல் நலம் குன்றவே செய்யும்; அதை வைத்து எவரும் மன வலிமை குன்றுவதாகக் கருதமாட்டார். அவ்வாறு கருதுபவர் இருப்பின் அவர் உண்மை அறியாதவரே!

எனினும், தாங்கள் மனவலிமை பெற்றிருப்பதுபோல உடல் வலிமையும் பெற்றவர்தாம். ஆதலினால் தாங்கள் தேவையான அளவுக்கு ஓய்வும் உறக்கமும் எடுத்துக் கொண்டு உடல் வலிமை குன்றாமல் பார்த்துக் கொள்ள அன்புடன் வேண்டுகின்றேன்.

- புலவர். ப. எழில்வாணன், க.மு., பள்ளப்பட்டி.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிறைக்குத் தேர்வு வந்துவிட்டதா? கயல்குட்டி முன்பைக் காட்டிலும் இப்போது வேகமாக ஆடிக் கொண்டிருப்பாளோ? இசை, கயல் நாட்டியப் பேரொளிக்ள் ஆடுவதை இதுவரையில் தணல் அப்பா பார்க்கவில்லையாம். நாங்கள் அங்கு வந்த பின்பு அரங்கேற்றம் செய்ய அணியமாகட்டும்.

தணல் குட்டியுடன் விளையாட இசை, கயல் அணியமாக இருப்பார்கள் அல்லவா? தணலைச் சில நேரங்களில் நான் திட்டினால், முதலில் நடிப்புச் சிரிப்பு(பல்லை)க் காட்டுகிறான். அதற்குப் மேல் திட்டினால் பலவகையாக எதிர்கொள்கிறான். சில நேரங்களில் கண்ணை இலேசாக மூடிக்கொண்டே அசையாமல் என் மேலேயே வந்து சாய்ந்து கொள்வான். நீண்டநேரம் கழித்து மெதுவாய்க் கண் திறந்து பார்த்து என் முகம் சரியாகிவிட்டதாவெனப் பார்க்கிறான். திட்டு அதிகமானால் ஒழிய அழுவதில்லை. அவர் திட்டுவதே இல்லை. இரவு 8 மணிக்கு மேல் வந்தாலும் அவர் அவனிடப் விளையாடுவதற்குள் நேரம் ஓடிவிடுகிறது அவர் வந்த பின்பே உறங்குவான். அதுவரையில் காத்திருப்பான் நாங்கள் இருவரும் தணல் அங்கு அப்பாவுடன் எப்படியெல்லாம் இருப்பான் என்று ஆவலுடன் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. நானும் நாள்களைப் பிடித்துத் தள்ளுகிறேன். ஆமை போல் நடக்கிறது. ----

தணல் பல் அழகாய்த் தான் உள்ளது. மொத்தம் 15 பற்கள்! மண்டை பெரிதாகத்தான் உள்ளது. முடி நிறைய வளர்கிறது. 2 முறை வெட்டியிருக்கிறேன். மெலிவாகவும் இல்லை. குண்டாகவும இல்லை. எப்படியோ சிறிய கிண்ணத்தில் இட்டளி செய்தேன். ஓரளவு இட்டளி என நினைத்துக் கொண்டே சாப்பிட்டோம். கருப்பு, பூ (மல்லிகை) மேல் மிகவும் ஆசையாக உள்ளது. இங்கு நிறைய வகைப் பூக்கள் மிகவும் அழகாக இருந்தாலும் நம் பூக்களைப் போல் மணப்பதில்லை. பெண்களும் அவ்வாறே!

அப்பா! தென்மொழியில் எப்போதோ ஒரே ஒரு கட்டுரை மட்டும் எழுதிவிட்டு அமைந்துவிட்டதுபோல் இருந்தாலும், நன் முழுமையாகத் தெரிந்தபின்பே தொடங்கமுடியும் என்று அமைதியாய் உள்ளேன். முன்பு (போன ஆண்டு) எடுத்த குறிப்புகளில் இப்போது சில திருத்தங்கள் உள்ளன. என்றைக்குமே திருத்தம் வராமல்தான் எழுதவே இயலும் என்பதால் விட்டு வைத்திருக்கிறேன். மற்றபடி எனக்கு நிறைய நேரம் ஒதுக்கமுடியும். அந் நேரங்களில் அவ்வப்போது கிடைக்கும் நூல்கள் (தமிழ், ஆங்கிலம்) படிப்பதும், பிரெஞ்சு வீட்டிலிருந்தே கற்றுக கொள்வதும், தொலைக்காட்சி வழி அரிய நுட்பங்களையும், மும்மொழித் தொடர்பினை (பிரெஞ்சு, இத்தாலி, செருமனி) அறிந்து கொள்ளவும் நேரத்தைச் செலவு செய்கிறேன்). வேறு ஏதேனும் எழுதலாம்! (கதை, உரைநடை) ஆனால் சூழல் இடங்கொடுக்கவில்லை. ஆப்பிரிக்கா(மேற்கு)வில் சென்ற ஆண்டு நிகழ்ந்த கேமரூன் நகரின் நியாசு ஏரியில் நடந்த இயற்கை அழிவு குறித்து ஒரு கட்டுரையை ஆங்கிலத்தில் படித்து, தமிழில் கட்டுரை வடிவமாய் எழுதியிருக்கிறேன். அது சென்ற ஆண்டுச் செய்தியாக இருப்பதால், அனுப்பாமல் இருக்கிறேன். அஃது அறிவியல் தொடர்பான சிந்தனைக்குரிய செய்தி! இன்னும் ஒரு கிழமையில் அனுப்புகிறேன். அங்குள்ள மக்களுக்குத் தேவையா என்பது பற்றி என்னால் எண்ண முடியவில்லை.

அப்பா! அங்கிருந்து வருகின்ற மடலில் ஏதேனும் 2, 3 வரிகளாவது நீங்கள் எழுதுங்கள்! எத்தனையோ ஆண்டுகள் பிரிந்திருப்பது போல இருக்கிறது. எவ்வளவோ சமயத்தில் தாங்கிக் கொண்டாலும், ஒரு சில நொடி, அத்தனையையும் நொறுக்கி விடுகிறது. அந்த 'ஒரு சில நொடி' தான் அங்கிருந்து வரும் மடல்களைப் படிக்கும் போது உண்டாகும். அலுவலக அச்சகப் பணிகள் நிறைவாகச் சென்று கொண்டிருக்குமென நம்புகிறோம். தமிழக, ஈழச் செய்திகள் அதிகம் தெரிய வருவதில்லை, உங்கள் மடல் வழியாகக் கொஞ்சம் தெரிந்து கொண்டதுதான்.

அம்மா! நான் இம்முறை நிறைய எழுதிவிட்டேன். அப்பாவிற்கு நேரமே இருக்காது என்றாலும் நீங்களும், பிறையும் அசைபோடுவதற்காகவே இப்படி என்னென்னமோ எழுதுகிறேன். இப்போதுதான் தணல் முத்தம் கொடுக்கத் தெரிந்திருக்கிறான். முத்தம் கொடுத்தே நன்றாகக் 'காக்காய்' பிடிக்கிறான். இதில் ஏமாறுவதே பெரும்பாலும் அவர்தான்!

சரி! சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் அனைவரும்!

அன்பு மகள், செந்து